# செந்தமிழ்ச் செல்வி

## திங்கள் வெளியீடு




சிலம்பு 15 தாது - கார்த்திகை 1936 பரல் 4

# பொருளடக்கம்


திருவாளர் வ உ சிதம்பரம் பிள்ளை (முகப்புப்படம்)

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை பி. ஏ. ௧௬௧

பேதைமை (பாட்டு)
வித்துவான் பெ. கோவிந்தன் ௧௬௫

பழனியாண்டவர் (பாட்டு)
நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் ௧௬௬

தமிழ்மொழியில் சகர முதன்மொழி
துடிசைகிழார் அ. சிதம்பரனு ரவர்கள் ௧௬௯

குறுந்தொகை உரை
வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன் ௧௭௩

இரகுநாத நாயக்கர்
வித்துவான் கி. சாமிக்கண்ணு ௧௭௮

முற்கால நூல் நிலையங்கள
காழி P. சுப்பையா ௧௮௦

ஜார்ஜ் டீபென்சன்
N. குழந்தைவேலன், B. A. ௧௮௪

இளங்கோவும் பாவிகழும்
வித்துவான் S. ஆறுமுக முதலியார், பி. ஏ., எல். டி. ௧௮௮

கல்வி பயிற்றுமுறை நாட்டுமொழியிலா ? ஆங்கிலத்திலா?
ஹானரபிள் சர் பிரோஸ் செத்னு, ௧௯௪

குறுந்தொகை மொழிபெயர்ப்பு
T. B. கிருஷ்ணசாமி முதலியார், எம். ஏ., பி. எல். ௧௯௬

வீரரும் வீரரைப் போற்றலும்
குணஜனார்த்தனம், எம். ஏ., எல். டி. ௨௦௧

தமிழருக்கு இந்தி வேண்டுமோ ?
சுவாமி சுத்தானந்த பாரதியார், ௨௦௫

தினமணி மதிப்புரைக்கு எதிர்ப்புரை
ஈழத்துச் சிவானந்த அடிகள, ௨௦௮

நோபல் பரிசு (The Nobel Prize)
சி. சங்கரநாராயண பிள்ளை. பி. ஏ., பி. எல். ௨௧௦

ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் (உருவப்படம்(

செய்திகளும் குறிப்புகளும் ௨௧௩



---


ஈசுவர வருட சைவப் பஞ்சாங்கம்

25-12 36-ல் வெளிவரும்

| | |
|---|---|
| பெரிய அளவ | கரடாத்தாள் விலை அணு $1\frac{1}{2}$ |
| ,, | வழுவழுப்புத்தாள் விலை அணு 2 |
| சிறிய அளவு | கரடாத்தாள் விலை அணு 1 |

குறிப்பு: வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.



திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கடு ] தாது—கார்த்திகை [பரல்-ச

## திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

### திருக்கருகாவூர்த் திருத்தாண்டகம்

பூத்தானும் பூவினிறத்தானுமாம் பூக்குளால்
வாசமாய் மன்னிநின்ற
கோத்தானுங் கோல்வளையாள் கூறனாகுங் கொண்ட
சமையத்தார் தேவனாகி
யேத்தாதார்க்கென்று மிடரே துன்பமீவானு
மென்னெஞ்சத் துள்ளேநின்று
காத்தானுங் காலனடையா வண்ணங் கண்ணானுங்
கருகாவூ ரெந்தைதானே.

பதவுரை :—

கருகாவூர் எந்தைதான்—திருக்கருகாவூர்ப் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற எங்கள் தந்தையாகிய சிவ பெருமான் ஒருவனே,

பூத்தான் ஆம்—தன்னியல்பில் (சொரூப இலக்கணத்தில்) பூவின் உருவம்போல உண்மை (சத்து) ஆகும்,

பூவின் நிறத்தான் உம் ஆம்—அப்பூவின் கண்ணுள்ள நிறம்போல அறிவு (சித்து) ஆகும்,

பூக்குள் ஆல் வாசமாய் மன்னிநின்ற கோ தான் ஆம்—அப்பூவினுக்குள் நிலைபெற்றிருக்கின்ற மணம்போல இன்பம் (ஆநந்தம்) ஆகிய சிறப்பாகும்,

கோல்வளையாள் கூறனாகும்—பொதுவியலில் (தடத்த இலக்கணத்திலே) திரட்சியான வளையல்களை அணிந்திருக்கிற உமாதேவியை இடதுபாகத்தில் வைத்திருக்கிறவனாகும்.

கொண்டசமையத்தார் தேவனாகி—எவர் எந்தச்சமயத்தைப் பின்பற்றி எவ்வுருவில் எத்தவம் செய்து வழிபடுகிறாரோ அவ்வுருவில் அவர் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு தக்கவாறு அருள் செய்யுங் கடவுளாகும்,

எத்தாதார்க்கு என்றும் இடரே துன்பம் ஈவானும்—தன்னைச்சார்ந்து வழிபடாதவருக்கு அவர் தன்னைச் சாரும்படி செய்தற்கு எப்பொழுதும் இடரையும் துன்பத்தையும் கொடுப்பவனாகும்,

என்நெஞ்சத்துள்ளே நின்று—எனது நெஞ்சினுள்ளே நிலையாக நின்று,

காலன் அடையா வண்ணம்—உயிரை உடலினின்றும் பிரிக்குஞ் செயலைச் செய்கிற காலன் என்னை அவ்வண்ணஞ் செய்ய அணுகாதபடி,

காத்தாளும் கண்ஆம்—என்னை அடிமையாகக்கொண்டு காத்து ஆளுகின்ற எனது உயிர் போன்றவனுமாகும்.

விளக்கவுரை :—

கருகாவூர் எந்தை தானே—உயிர்களுக்கெல்லாம் அறிவு விளங்கும்படி செய்கிறவன் என்பார் 'எந்தை' என்றார். தான்—அசை. ஏ-பிரிநிலைப்பொருள் தந்து-நிற்கிறது.

பூதான் ஆம்—இங்கே பூ என்றது பூவினது உருவகத்தைக் குறிக்கிறது, உருவமின்றிப் பூ என்ற பொருளுளதாதலில்லையாதலின் பூவினுருவம் உருவகமாக இறைவனது உண்மைத் தன்மையை, அதாவது, என்றுமுளதாந் தன்மையை (சத்துத்தன்மையை)க் குறிக்கிறது. உலகிலுள்ள பொருள்களெல்லா முளவாதற்கு இறைவனது உண்மைத்தன்மை நிலைக்களனாகின்றது. அவனது உண்மைத்தன்மையின்றி உலகப்பொருள்கள் உலகில் உளவாகி இயங்கா. திருஞான சம்பந்த அடிகள் இறைவனை, உள்ளது என்று திருவிளநகரத் தேவாரம் எட்டாவது பாட்டிற் கூறுதல் காண்க. ஆகும் என்ற பயனிலை வினைமுற்று ஆம் எனக் குறுகியது. இவ்வாறே கூற்றாகும் என்பதிலன்றி ஏனைய பயனிலை முடிபு வினைமுற்றுகளிலும் ஆகும் குறுகி நிற்கிறது.

பூவின் நிறத்தான் உம்ஆம்—நிறம் + அத்து + ஆன் = நிறத்தான்;அத்து, ஆன் சாரியைகள். உம் = அசைநிலை. சாரியை,அசைகளைக் கழித்த பின் பூவின்நிறம் ஆம் என நிற்கும். பூவின் நிறம் உருவகமாக இறைவனது அறிவுத்தன்மை (சித்துத்தன்மை) யைக் குறிக்கிறது. உலகிலுள்ள உயிர்களில் விளங்கும் அறிவுக்கு இறைவனது அறிவு நிலைக்களமாயிருக்கிறது. அவன் அறிவிக்காவிடில் உயிர்கள் ஒன்றையும் அறியா.

பூக்குள்ளால் வாசமாய் மன்னி நின்ற கோதான் ஆம்—பூ + கு + உள் + ஆல் = பூக்குள்ளால், கு, ஆல் சாரியைகள். உருவமும் நிறமும் புறத்திற் காணப்படுவனபோல அல்லாது மணமானது மோப்பார் மூக்கினுள்ளே அறியப்படுதலால் பூவில் வாசம் என்னாது பூக்

குள் வாசம் என்றார். பூக்குள் வாசம் உருவகமாய் இறைவனது இன்பத்தன்மை (ஆநந்தத்தன்மை)யைக் குறிக்கிறது—உயிர்கள் தாம் அடையும் இன்பத்திற்கு இறைவனுடைய இன்பத்தன்மை நிலைக்களனா யிருக்கிறது. இறைவன் உலகப்பொருள்களோடு கலந்திராவிடின் உயிர்கள் அவற்றால் வருஞ் சிற்றின்பம் நுகரா; உயிர்கள் வீட்டுநிலையில் இன்ப உருவனாகிய இறைவனைச் சார்ந்தாலன்றி, பேரின்பம் நுகரா—இன்பத்தன்மை இறைவனுக்கே தனியாக உரிய சிறப்பாயிருத்தலின் வாசமாய் மன்னி நின்ற கோ ஆம்என்றார். கோ=சிறப்பு; கோத்தான் என்பதில் தான் அசை.

பூவின் உருவம் பூவின்நிறம் பூவின் மணம் மூன்றுஞ்சேர்ந்து பூ என்ற பொருளின் சொரூபமாயிருத்தல்போல, உண்மை, அறிவு, இன்பம் (சச்சிதானந்தம்) மூன்றுஞ்சேர்ந்து இறைவனுடைய சொரூபங்களாயுள்ளன. அவை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாதனவாயுள்ளன. பூவின் உருவம், நிறம், மணம் மூன்றும் வெளியுலகில் இயற்கையிற் காணப்படும் இறைவனுடைய அருட்சத்தி வெளிப்பாடுகள் (Expression of God's energy as seen in Nature) உண்மை அறிவு இன்பம் மூன்றும் இறைவனிடம் விளங்கும் அருட்பண்புகள் ஆதலின் பூவின் உருவம், நிறம், மணங்கள் மூன்றும் முறையே உண்மை அறிவு இன்பங்களுக்கு ஒப்புமைகளாகக் கூறப்பட்டன.

இக்கருத்தைத் திருமூலர் திருமந்திரம் 2829-வது பாட்டில்

உருவுற் பலநிற மொண்மணம் சோபை
தரநிற்ப போலுயிர் தற்பரந் தன்னின்
மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்
சொரூபத்தன் சத்தியாதி தோன்ற நின்றானே

என்று கூறினர். பரஞ்சோதி முனிவர் தாமியற்றிய திருவிளையாடற் புராணப்பாயிரத்தில், "பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப் போத வின்பமா வண்ணம் மெய்கொண்டவன்" என்று கூறினர்.

கோல்வளையாள் கூறன்—உண்மை அறிவு இன்பமாகிய சொரூப இலக்கணங்களையுடைய இறைவனே உயிர்கள் உய்யும்பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு அருட்சத்தியோடு கூடிய பொது இலக்கணத்தைக் கொண்டான் என்பார் 'கோல்வளையாள் கூறனும்' என்றார்.

கொண்ட சமயத்தார் தேவனாகி—அங்ஙனம் அருட்சத்தியோடு பொது இயல் வடிவங்கொண்ட இறைவன், மக்கட் பருவமடைந்த உயிர்களின் பலதிற அறிவு நிலைகளுக்கு ஏற்பச்செய்யப்பட்ட பல சமயங்களில் நின்று அவர்கள் தன்னைப் படிமுறையில் வழிபட்டு உயிர்வளர்ச்சி பெற்றுப் பின் சைவசமயத்தில் சரியை கிரியை யோகங்களை அநுட்டித்து அறிவு முதிர்ந்து மெய்யறிவுபெற்று முடிவில் பேரின்பமடையுங் கருத்துடையன் என்பார் "கொண்ட சமயத்தார் தேவனாகி" என்றார்.

"நூலறிபேசி நுழைவிலாதார் திரிக
நீலமணி மிடற்றான் நீர்மையே—மேலுலந்த
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள்
செய்வார்க்கும் அக்கோலத் தவ்வுருவே யாம்."

என்று காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதியில் கூறி யிருத்தல் காண்க.

எத்தாதார்க்கு என்றும் இடரே துன்பம் ஈவான் ஆம்—இறைவன், மக்கள் உயிர்கள் உய்யும்படி பல சமயங்கள் வகுத்து முறை செய்திருந்தும் அம்முறையை அறிந்து அதன்படி ஒழுகாத மக்களுக்கு அவர்கள் மேற்கொண்ட மறக்கருணையால் உலக வாழ்வில் துன்பங்களைக் கொடுத்து அவர்களை உய்விக்க வேண்டும் என்ற தன்கருத்தை நிறைவேற்றுவான் என்பார் 'எத்தாதார்க்கு என்றும் இடரே துன்பமீவானும்' என்றார்.

இடர் என்பது சிறு துன்பம். துன்பம் என்பது பல இடர்கள் கூடிய பெருந் துன்பம்—தீய வழியில் ஒழுகுகின்ற மக்களை அதனை விட்டு நல்வழியில் ஒழுகச்செய்தற்குத் துன்பமே ஏதுவாயுள்ளது. 'இடரே'—ஏ-அசை.

என்நெஞ்சத்துள்ளே நின்று காலனடையா வண்ணம் காத்தானும் கண்ணும்—பசுத்தன்மை நீங்கிச் சிவகரணமாக மாறிய நெஞ்சில் இறைவன் நிலையாக வீற்றிருத்தலால் எல்லா நற்குணங்களும் அக்குணங்களாலுண்டாகும் ஆற்றலும் ஒருவர்க்கு உண்டாதல் பற்றி அடிகள் 'என்னெஞ்சத்துள்ளே நின்று காலனடையா வண்ணம் காத்தானும் கண்ணும்' என்றார்.

நமனையஞ்சோம் (312—1) என்றும்
சாவாமேகாத் தென்னையாண்டாய் போற்றி (246—9)

என்றும் அடிகள் பிறவிடங்களிலும் கூறியிருத்தல் காண்க. தாயுமான அடிகளும் 'அந்தகா நீ யொருபகட்டாற்பகட்டுவதடா தடா, காசுநம்பாற் செல்லாதடா. என்று பேசவாய்தந்த செல்வமே' (119) என்று கூறுதல் காண்க. கண் உடலுறுப்புகளிற் சிறந்த உறுப்பு ஆதலின் 'கண்ணும்' என்பது உயிர்போன்றவன் என்ற பொருளில் வந்தது.

என்னெஞ்சத்தினுள்ளே நின்று காலனடையா வண்ணம் காத்தானும் கண்ணும் என்றதனால் அடிகள் இப்பாட்டிற் கூறிய உண்மைகள்தாம் அநுபவத்தில் அறிந்து கூறிய உண்மைகள் என்று குறிப்பாலுணர்த்தினார்.

எந்தை—எழுவாய்; பூவாகும் என்பதுமுதல் கண்ணாகும் என்பது வரையிலுள்ள ஆறு, 'ஆகும்'கள் பயனிலைகள்.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை.

# புதுக் கவிகள்-Original Poetry

## பேதைமை

[கோடமுடி வித்வான் பெ. கோவிந்தன் அவர்கள்]

*பெற்ற தாயினும் பேணி வளர்க்கின்ற*
*நற்ற மிழ்க்கணும் நாட்டினும் முற்றிய*
*பற்றி லாதான் பதடி; பசிகொண்டு*
*சுற்றிச் சுற்றிவீண் சோறுணும் பொம்மையே.* (1)

*வேந்த ராகி விளங்கினும் என்பயன்?*
*மாய்ந்து மண்ணில் வீழினும் வறுமைஎன்?*
*தீந்த மிழ்க்கணும் செந்தமிழ் நாட்டினும்*
*ஆய்ந்த ஆய்வினொ டன்புமில் லாதவர்.* (2)

*பெற்ற நாட்டிற்கும் பேசுந் தமிழுக்கும்*
*நற்பு கழ்நிற்க நற்செயல் செய்கலார்*
*புற்ற லைப்பனி போலழி வெய்துக;*
*மற்றிஞ் ஞாலத்து மாள்க அவர்பெயர்.* (3)

*கங்கை யைக்கொண்ட சோழன் கனகன்மேல்*
*செங்க லேற்றிய சேரன்செங் குட்டுவன்*
*எங்குத் தோன்றினன்? இத்தமிழ் நாடெனின்*
*உங்கள் வீரம் உரைமின்; உரமிலீர்!* (4)

*மண்ணிற் பாரம் மருவப் பிறந்திரோ?*
*உண்ணும் ஊணை ஒழிக்கப் பிறந்திரோ?*
*பெண்ண லமுண்டு மாயப் பிறந்திரோ?*
*எண்ணு மின்; தமிழ்க் கென்செய்தீர்? ஏழைகாள்!* (5)

*குற்ற மீது; குணமிது; கொண்டுணும்*
*நற்சு வைப்பொரு ளீதென் றறிவிரோ?*
*சிற்று ணர்விர்காள்! செந்தமிழ்த் தேனுண்ணு*
*தெற்றுக் கிங்குளிர்? இச்சுவைக் கீடுண்டோ?* (6)

வீட ணன்போல் விரகியற் றித்தமிழ்
நாட ழிதலை நாடினி ரோ? கீழீர்!
பீட ழிந்து பிறர்க்கடி மைப்பட்டுக்
கேட ழிந்த பழங்கதை கேட்டிரோ? (7)

வீடு வீடெனும் மேன்மையில் லீர்! தமிழ்
நாடு தாயொடு நாமுறை வீடன்றோ?
பீடு ணர்ந்திரோ? பேறடைந் தீரோ? நீர்
தேடும் வீட்டிற்குஞ் செல்லத் தகுவிரோ? (8)

கன்ன டந்தெலுங் கம்மலை யாளமாம்
நன்மொ ழிகளும் நற்றமி ழேமுன்பு.
வன்சொ லாரியம் வந்து பிரித்தது;
பின்னும் மாற்றுமால் பேதையீர்! காண்மினே. (9)

தக்க சீர்த்தமிழ் நூலைக்கல் லாதகீழ்
மக்கள் மாக்களை மானுவ ரென்பரால்
மிக்க சீர்க்குறள் வேத முணர்கலார்
ஞக்க லையொப்பர்; வேற்றுமை கொள்ளலால். (10)

---

# பழனியாண்டவர்

[நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்]

தேனு ரிதழி நறுந்தொடையுந்
திங்கட் கொழுந்துந் திருக்ககற்றுந்
தெய்வப் புனலுஞ் சுமந்தசடைச்
சிவனார் கருணைத் திருவுருவே!
வானு டருளுங் கற்பகமே
மண்ணு டவர்க்கு மலைமருந்தே
மலையத் தலைவி யபரபர
வனசக் களப மணிக்குடத்துப்
பானு றமுதக் குதலைமொழிப்
பாலா குமர குருபரனே
பச்சைக் கலப மயிற்புரவி
பரிக்குஞ் சதங்கைத் திருத்தாளா

ஆறு வருளே ! அருட்பெருக்கே
அன்பே அன்பி லூறிவரும்
அளியே தளிசேர் பழனிமலை
ஐயா சரணஞ் சரணமே. 1

சீரார் சதங்கை செஞ்சிலம்பு
சிலம்புந் தாளும் அழகொழுகுஞ்
செவ்வா யரும்புந் திருநகையுஞ்
சென்னி மன்னுந் திருமுடியும்
கூரார் கணிச்சி நெடும்படைபோற்
குலவும் பொற்கோ வணத்தண்டும்
கொண்ட கரமு மொக்கலிலே
கொடுத்த கரமு மாயெழுந்த
பாரார் முனிவர் தேவர்தொழும்
பாலா குமரா பழையோனே
பயிலும் யோக ரருட்கண்ணிற்
பலவாய்த் தோன்றும் பரஞ்சுடரே
ஆரா வமுதே யருட்கடலே
அன்பு மலையே யின்பருளும்
அரைசே யுரைசேர் பழனிமலை
யத்தா அபயம் அபயமே. 2

பைம்பொன் னழுத்தும் நவமணியின்
பத்தி நிரைத்த சுடர்முடியும்
பருவத் திங்கட் டிருமுகமும்
பவள விதழுஞ் சிறுநகையும்
நம்புங் கடக மணித்தோளும்
நகைநூன் மார்பும் பட்டுடையும்
நாதச் சிலம்பு புலம்புமிரு
நளினத் தாளும் வடிவேலும்
செம்பொன் னொழுக வழகொழுகச்
சேர்ந்த புழுகு மணமொழுகும்
தெய்வ வுருவுங் கொண்டுவருஞ்
செல்வக் குமரா வமரர்தொழும்
அம்பொற் குவையே மணித்திரளே
யமுதே யமுதி லூறிவரும்

அளியே தளிசேர் பழனிமலை
யரசே யருள்க வருள்கவே. 3

மாவின் பழமு மோர்பழமோ
மறையிற் பழுத்த வுபநிடத
மரத்திற் பழமோ சைவமுதல்
மதுரப் பழமோ வண்டமிழ்ப்பொற்
றேவின் றருவிற் கனிந்தவருட்
டெய்வப் பழமோ யெனவுமையுஞ்
சிவனு முரைத்துக் கரநீட்டிச்
செல்வா வருக குல்லைநறும்
பூவுங் கடம்பு மணியுமணிப்
புயனே வருக முச்சங்கப்
புலவா வருக வெனப்பருவம்
புகன்று புகன்று சீராட்ட
ஆவும் பொழியுங் கதிருமுள
மகிழும்படியே யருள்புரியும்
அண்ணு! விண்ணோர் பழனிமலை
யரைசே வருக வருகவே. 4

முருகா போற்றி மெய்ஞ்ஞான
முதல்வா போற்றி தேவர்குறை
முடித்தாய் போற்றி யுலக—மெலா
முடையாய் போற்றி திருமாலின்
மருகா போற்றி குன்றுதொறும்
வருவாய் போற்றி யெழிற்கலப
மயிலா போற்றி யிருள்கெடுக்கும்
வடிவேற் படையா யடிபோற்றி
குருகார் முன்கை மடப்பிடியும்
குறவர்மானு மிடம்பகிர்ந்த
குன்றே போற்றி யுயிர்படருங்
கொம்பே போற்றி யடியேனுக்
கருகாய் வந்து தடுத்தாளு
மப்பா போற்றி யொப்பாரும்
ஆகாய் போற்றி பழனிமலை
யமலா போற்றி போற்றியே. 5

# இலக்கணமும் இலக்கியமும்:
# LANGUAGE AND LITERATURE

## தமிழ்மொழியில் சகர முதன்மொழி

[துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்]

(முன் ௧௨௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தொல்காப்பியர் காலத்தை "தமிழ்ச்சொல்லாராய்ச்சி நிரம்பாத காலம்" என்கிறார்.

அவர் அப்படிக் கூறுவதற்கு "மொழிப்பொருட் கிளவி விழிப்பத் தோன்றா" என்ற தொல்காப்பியச் சூத்திரம்தான் காரணமோ என்னவோ தெரியவில்லை.

அச்சூத்திரம் காரணமாயிருக்குமானால் அச்சூத்திரமே தொல்காப்பியர் காலத்துக்கு முந்தித் தமிழில் மொழி ஆராய்ச்சி நிரம்பியிருந்தது என்பதைத் தெரிவிக்கின்றது.

தொல்காப்பியருக்கு முந்தியகாலம் தமிழ் ஐந்திர இலக்கணம் வழக்கில் இருந்த காலம். அதற்கு முந்தியது அகத்தியர் காலம். அவருக்குப் பன்னூறாண்டுகளுக்கு முற்பட்ட இலக்கணங்கள் பேராற்று நெடுந்துறையன் பெருநூல் என்ற இலக்கணமும், இடைகழிச் செங்கோடன் இயல்நூல் என்ற இலக்கணமும் ஆகும்.

தலைச்சங்க காலத்துக்கு முற்பட்ட காலமாகிய, பெருவள நாட்டுச் **செங்கோ** என்னும் பேரரசன் காலத்தில், **சக்கரன்** என்னும் பேருடைய பெரும்புலவனைத் தலைமையாகக்கொண்ட தமிழ்ச்சங்கத்தில் மேற்சொன்ன இரண்டு நூல்களும் இலக்கணங்களாய் இருந்தன.

அவை சுவடி உருவமாக இருக்கின்றனவேயொழிய இன்னும் புத்தகங்களாக வெளிவரவில்லை.

ஆகையால் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே தமிழ்மொழி ஆராய்ச்சி நிரம்பியிருந்ததென்றும், தொல்காப்பியர் காலத்தில் சிறிது மலினமடைந்து இருந்ததென்றும் அறிகிறோம்.

தலைச்சங்கத்துக்கு முந்திய தமிழ்ச்சங்கத்திலேயே தலைமை வகித்த புலவன் பெயர் **சக்கரன்** என்று சகர முன்

மொழிச் சொல்லாயிருக்க, தலைச்சங்கத்துக்குப் பிற்பட்ட ஆசிரியராகிய தொல்காப்பியர் ச் என்ற மெய் அகரத்தோடு மொழிக்கு முதலாகாது என்று சூத்திரம் செய்வாரா என்று உன்னிப்பாருங்கள்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் சொல்லுகிறபடி ச என்ற ஒலி க என்ற ஒலியினின்றுமே பிறந்தது என்பதூஉம், க என்பதே முதல் ஒலி என்பதூஉம் உண்மையே. ஒலி நூலும் அப்படியே கூறுகிறது.

ஆனால் அ என்ற ஒலியினின்று 11 உயிர்களும், க—ர—ம் என்ற ஒலிகளினின்று 15 மெய்களும் தோன்றின பிற்பாடே

“ எழுத்தெனப் படுப
அகரமுதல னகர இறுவாய்
முப்பஃ தென்ப ”

எனத் தமிழ் நெடுங்கணக்கை வரிசைப்படுத்துவார் ஆயினர்.

அப்படி வரிசைப்படுத்தியபொழுதே ச என்ற எழுத்தும் தமிழ் நெடுங்கணக்கில் உட்படுத்தப்பட்டது.

ஆகையால், சகர முதன்மொழிச்சொற்கள் தமிழ்மொழியில் ஆதிமுதற்கொண்டே இலக்கியங்களில் சிறு வரவிற்றாய் விரவி வந்திருக்கின்றன.

இன்னும் அவர், “சகரத்தைத் தலையிற்கொண்ட சொற்களும் பரவை வழக்கில் இருந்தனவாகலாம். ஆயினும், அவை இலக்கியங்களில் ஏறாதனவாயிருக்கலாம். ஆகையால் ஆசிரியர் அவற்றை விலக்கினார்போலும்; அல்லது, சில சொற்கள் மாத்திரம் ஏறிக்கொண்டமையால், தமிழ்ச்சொல்லாராய்ச்சி நிரம்பாத அக்காலத்தில் இருந்த அவர் அவற்றைத் தமிழ் அன்று, வடமொழி என வைத்தனர்போலும்” என்று கூறுகின்றார்.

சகர முதன்மொழிச்சொற்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னும், தொல்காப்பியர் காலத்திலும் இலக்கியங்களில் விரவி இருந்ததினாலேதான் தொல்காப்பியரும் ஏனைய இலக்கண ஆசிரியர்களும் சூத்திரம் செய்திருக்கிறார்கள். ஆகையால், தொல்காப்பியர் சூத்திரம் செய்யாமல் விலக்கினார் இல்லை. அச்சுப்பிரதியின் பிழையினால் ஏற்பட்டதே இக்குழறுபடைகள். இந்த ஒரு சூத்திரம் மாத்திரம் அன்று. இன்னும் பல சூத்திரங்கள் இம்மாதிரி பிழைபடப் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக;—

ஞ—ய—வ என்ற எழுத்துக்களுக்காக ஏற்பட்ட நன்னூற் சூத்திரங்களைக் கவனியுங்கள்:—

ஞ்

"அ—ஆ—எ—ஒவ்வோடாகும் ஞம்முதல் என்றும்

ய்

அ—ஆ—உ—ஊ—ஓ—ஔ யம்முதல் என்றும்

வ்

உ—ஊ—ஒ—ஓ அலவொடு வம்முதல்" என்றும்

தெளிவாக, முன்னோர் இலக்கணங்களை ஒட்டி பவணந்தியார் கூறியுள்ளார். இவர் தொல்காப்பியத்துக்கு மாறாகச் சூத்திரம் செய்திருந்தால் அவ்வாறு கூறியிருப்பாரா? ஆகையால், தொல்காப்பியத்தை ஒட்டியே சூத்திரம் செய்திருக்கிறார் என்பது போதரும்.

இங்கே, வாசகர்கள் ஒன்றைக் கவனிக்கவேண்டும். எல்லா உயிர்களோடும் மொழிக்கு முதலாக வராத ஞ—ய, வ என்ற எழுத்துக்களுங்கூட அ என்ற எழுத்தை விட்டபாடில்லை. ஏனென்றால், அகரத்தை விட்டால் மற்ற எழுத்துக்களோடு வர இயலாது. ஆகையால், எந்த எழுத்தும் அகரத்தைத் தவிர மற்ற எல்லா எழுத்துக்களோடுங்கூடி மொழிக்கு முதலில் வராமல் இருந்தாலும் இருக்கலாம். அகரத்தோடு மாத்திரம் சேர்ந்து வராமல் இருக்கமுடியாது. அப்படி அகரத்தோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வராவிட்டால் அந்த எழுத்துக்கு வாழ்வே இல்லை. அது தமிழ் நெடுங்கணக்கில் இருக்க நியாயம் கிடையாது.

இனித் தொல்காப்பியர் இந்த ஞ—ய—வ என்ற மூன்றெழுத்துக்களுக்கும் என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம்.

சுவடியில் உள்ளபடி கீழே தருகின்றேன்:—

ஞ்

"அ—ஆ—எ—ஒ எனுமுயிர் ஞகாரத்துரிய" என்றும்

ய்

"அ—ஆ—உ—ஊ—ஓ—ஔ எனுமுயிர் ஆறோடல்லது யகரமுதலாது" என்றும்

வ்

"உ—ஊ—ஒ—ஓ எனு நான்குயிரும் வ என்னெழுத்தோடு வருதல் இல்லை" என்றும் தெளிவுபடக் கூறியுள்ளார்.

பவணந்தியார் இவைகளை ஒட்டியே சூத்திரித்திருப்பது இப்போது தெளிவாகும்.

இன்னணம் கூறியிருக்கப்பட்ட சூத்திரங்களைத் தற்காலப் பதிப்பாளர்கள்

ஞ்

"ஆ—எ—ஒ எனுமூவுயிர் ஞகாரத்துரிய" என்று அகரத்தை விடுத்தும்,

ய்

"ஆவோடல்லது யகரமுதலாது" என்று முதலடியை அடியோடே ஒழித்துவிட்டு "ஆரே" என்பதை "ஆவோ" என்று மாற்றியும் பிழைபடப் பிரசுரித்துள்ளார்கள். பதிப்பாளர்களுக்குக் கிடைத்த ஏட்டில் முதலடியைக் கறையான் அரித்திருக்கலாம். அதைக்கொண்டு ஏடு எழுதுகிறவன் முதலடி இல்லாததால் "ஆரே" என்பதை "ஆவோ" என எழுதிச் சூத்திரத்தைப் பூர்த்திசெய்துவிட்டான். அவன் அப்படிச் செய்ததால் இலக்கிய வழக்குகள் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. வழக்குகள் இருந்துகொண்டுதான் இருந்தன, இப்பொழுதும் இருக்கின்றன.

வ்

வ் என்ற எழுத்தின் சூத்திரம் மாறுதல் அடையவில்லை

ஆகையால், மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டிய, ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் சரிவரச் சூத்திரங்களைச் செய்திருக்க, ஏடு எழுதினவர்களின் குழறுபடையால் தமிழ்மொழியில் விபரீத உணர்ச்சிகள் ஏற்படக் காரணமாயிற்று.

இனிமேல், தொல்காப்பியத்தைப் பதிப்பிக்கும் ஆசிரியர்கள் இவைகளை எல்லாம் பார்த்து, சீர்திருத்திக்கொண்டு பதிப்பார்களென நம்புகின்றோம்.

ஆராய்ச்சியாளர்கள் எதனையும் ஆராய்ந்து பார்த்த பிறகே ஒரு முடிவுக்கு வரவேண்டும். அச்சுப் புத்தகத்தில் இருக்கிறதேயென்று அப்படியே ஒன்றையும் விசாரியாமல்

எடுத்துக்கொள்ளுவதில் பல அல்லல்கள் உள. ஆராய்ந்து அறிவுக்குப் பொருந்தியதையே கொள்ளவேண்டும்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்ற திருக்குறளை எல்லோருக்கும் ஞாபகப்படுத்திக்கொண்டு இவ்வுரையை முடிக்கின்றோம்.

---

# குறுந்தொகை

## மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

### மருதம்

தலைமகனது புறவொழுக்கங் கண்ட தலைவி அவனொடு புலந்து கொள்வ துணர்ந்த தலைவன் அவளுடலைத் தணிப்பான் வேண்டிப் பாணனைத் தலைவியிடத்தனுப்பத் தலைவி பாணனை இழித்துக் கூறிய தாகத் தோழியை நோக்கி வாயில் நேர்பவள் கூறியது.

படிமத்து மோசிகீரனார் பாடியது

(படுமரத்து மோசி கீரன்—பிரதிபேதம்)
(படுமரத்து மோசி கீரனார்—பிரதிபேதம்)
(படுமோற்றூர் மோசி கீரனார்—பிரதிபேதம்)

33. அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெரும்செம் மலனே

என்பது வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது.

பதவுரை:—

அன்னாய்—தோழி, இவன் ஓர் இளமாணாக்கன்—இவன் கல்வியும் அறிவும் நிரம்பப்பெறாத ஒரு இளமாணவனை

ஒப்பவனுயுள்ளான்; தன்னூர் மன்றத்து—தன் ஊரிலுள்ள பரத்தையர் சேரியில், என்ன கொல்லோ—என்ன காரணத்தாலோ, இரந்து ஊண்நிரம்பா மேனியொடு—இரந்து உணவைப்பெற்றும் நிரம்பப்பெறாத இளைத்த சரீரத்தோடு, விருந்தின்ஊரும்—புதிய வேறிடங்களிலும்இரந்து செல்லும், பெரும் செம்மலனே—மிக்க பெருமையையுடையவனாக வுள்ளான்.

தோழியை அன்னாய் என்று விளித்தது அன்புடைமை பற்றி என்க. காமுகர்க்குத் தூதாய்ப் பரத்தையரில்லந்தோறும் சென்று யாழ்வாசித்துப் பிச்சை ஏற்கும் பெற்றிநோக்கி மாணுக்கன் என்றும், அதிலும் முதிர்ச்சிபெறாது கற்றுக் கொடுத்தளவே கூறும் தன்மையனாதலின் இளமாணுக்கன் என்றுங் கூறப்பட்டது. மாணுக்கன்—பயில்வோன்; இங்கு அறியாதவன் என்ற குறிப்பில் வந்தது. மன்றம்—பொதுவிடம்; பரத்தையர் சேரி. விருந்து—புதுமை; புதிய விடங்கள். செம்மலன் என்பது பிறகுறிப்பு; இழிவானவன் என்றவாறு.

## மேற்கோள் விளக்கம்:—

1. "தோழி தலைவியை அன்னை என்றலும், தலைவி தோழியை அன்னை என்றலும், இருவரும் தலைவனை என்னை என்றலும், உள வென்று கூறுவர் புலவர்."

—(தொல். பொருளி. 246 சூ. உரை: பக். 858)

"எனக்கு மாகாது என்னைக்கு முதவாது" என்றது தலைவனைத் தலைவி என்னை என்றது. —(குறுந். 27)

2. "அன்னை...............செம்மலனே"—இது பாணன் சொல் வன்மைக்குத் தோற்று வாயில்நேர்ந்த தலைவி தோழிக்கு உரைத்தது.

—(தொல். கற்பு. 675-6)

"அன்னை யிவனோ ரிளமா ணுக்கன்"

"அன்னாய் இவனோ ரிளமாணுக்கன்.........செம்மலனே" இது பாணன் வாயிலாக வந்துழிக் கூறியது.

—(தொல். கற்பு. இளம்பூ. பக். 247)

2. "அன்னை யிவனோ ரிளமாணுக்கன்"—என்பது தோழிக் குக் கூறியது"—என "அன்னை யென்னை யென்றலுமுளவே, தொன்னெறிமுறைமை சொல்லினு மெழுத்தினுந், தோன்றாமரபின வென்மனார்புலவர்" என்பதற்கு மேற்கோள்.

—(தொல். பொருளியல். பக். 310)

வாயில்களாவார்:—பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்ினர், கூத்தர், அறிவர், கண்டோர்.

'இளமாணுக்கன்'—'இன்மாணுக்கன்'—பிரதிபேதம்.

மெய்ப்பாடு—எள்ளல் பற்றிய நகை.
பயன்—வாயினேர்தல்

## மருதம்

தலைமகளை அவள் தமர்கள் தலைமகனுக்கு மணம் செய்து கொடுக்க நேர்ந்ததைத் தோழி ஊர்மேல் வைத்துத் தலைவிக்குக் கூறியது.

### கொல்லிக்கண்ணன் பாடியது

34. ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றாய்
இனிய து கேட்டின் புறுகவிவ் வூரே;
முனாஅ தியானையுண் குருகின் கானலும்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை யன்னவெங்
குழைவிளங் காய்நுதல் கிழவனு மவனே.

என்பது வரைவு மலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது.

பதவுரை:—

முனாஅது—முன்பக்கத்தே, யானையுண் குருகின் கானலும்—யானைகள் வந்து உண்கின்ற குருக்கத்திச் சோலையையுடைய கடலும், பெரும்தோட்ட—பெருந்தொகுதியான, மள்ளர் ஆர்ப்பு இசை வெரூஉம்—வீரர்களின் ஆரவாரிக்கும் ஒலியைக்கேட்டு அஞ்சும், குட்டுவன் மாந்தை அன்ன—குட்டுவன் சேரலாதனது நகராகிய மாந்தையையொத்த, எம் குழை விளங்கு ஆய்நுதல்—என்னுடைய காதணிகள் விளங்குகின்ற (ஆராய்ந்த) அழகிய நெற்றியையுடைய தோழி, ஒறுப்ப ஓவலர்—தாய் முதலியோர் கோபித்து அடக்கவும் வருத்தம் தணியாராய், மறுப்பத் தேறலர்—வருந்துதல் தகாதெனவற்புறுத்தவும் தெளியாராய், தமியர்—தனிப்பட்டவராய், உறங்குங் கௌவை இன்றாய்—துயிலுதலுமற்றுப் புலம்புகொள் துன்பமும் அலர்மொழியும் இல்லாதவராய், இனியது கேட்டு—வரைவுமலிந்த இனிய செய்தியைக் கேள்விப்பட்டு, இவ்வூர் இன்புறுக—இவ்வூரிலுள்ளார் இன்பமடைவாராக. கிழவனும் அவனே—உனக்குக் கணவனும் உன்னைக் களவினிற் கலந்த தலைவனே.

கௌவை—அலர்மொழி, துன்பம். ஒறுத்தல்—தண்டித்தல். குருகு—குருக்கத்தி. கானல்—கடற்கரைச்சோலை. தோடு—தொகுதி. குட்டுவன்—கடல்பிறக்கோட்டிய குட்டுவன் சேரலாதன். மாந்தை—ஒரு நகர்; 'மரந்தை' எனவும் காணப்பெறும். ஆய்நுதல்—அன்மொழித்தொகை; ஆய்—ஆராய்தற்குரிய அழகு. குழை நெற்றியால் விளங்கியதென்பதற்குக் 'குழைவிளங்காய்நுதல்' என்றார். கிழமை—உரிமை.

''கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்.''—

''கோடுநரல் பவ்வம் கலங்க வேலிட்டுடைதிரைப் பரப்பிற் படுகடலோட்டிய வெல்புகழ்க் குட்டுவன்'' (பதிற் 46). மாந்தை—

'மரந்தை' என்பதே பொருந்தும் . இது குட்டுவனுடையது.

''குரங்குளைப் புரவிக் குட்டுவன் மரந்தை யன்னவென் நலந்தந்து சென்மே'' (அகம் 376).

தலைமகளைப் பாட்டுடைத் தலைவனது நகரை யன்னாள் என்று கூறல் கவிமரபு. திருக்கோவை, களவியல் முதலியனவற்றில் காண்க.

## மேற்கோள் விளக்கம்:

1. 'யானையுண் குருகின்'—'யானையங் குருகின்'—பிரதிபேதம் 'யானையங் குருகின்' —(மதுரை 674)

2. ''களிமயில், குஞ்சரக் குரல குருகோடாலும்''—(அகம் 145)

3. ''ஒறுப்ப.....அவனே''—''தமரான் ஒறுக்கப்பட்டு ஓவாராய்த்துயருழத்தல் ஆகாதென ஆற்றுவிக்கும் சொற்களான் மறுத்துரைப்பவும், தேறாராய்த் தனித்து இருப்பார் உறக்கங் காரணமாக எழுந்தகௌவை கேளாது வரைந்தெய்திய மாற்றங்கேட்டு இவ்வூரும் இன்புறுக என்பதாம்'' —(தொல். களவு. பக். 428)

வெங்குழை யாய்நுதல் என்பதை, என் குழை ஆய்நுதல் என்றும், வெம் என்பது பருத்த அல்லது பரிய என்னும் பொருளில் வந்தது என்றும் கொள்ளலாம். 'முஅ தியானை யுண்குருகின் கானலும்'—'முஅ அது யானையங் குருகின் கானலம்'—பிரதிபேதம்.

தோட்ட=தொகுதியுடைய.

'' கடிதோட்ட கவளகத்தே''—(திருக்கோவை : 8) என்பதினுங் காண்க.

மாந்தை சேரநாட்டிலுள்ளதோர் நகர். இதனை ''இலங்கு நீர்ப் பரப்பின் மாந்தையோர் பொருந'' (பதிற்றுப்பத்து-9 பத்து-10- 8) என்பதாலறிக.

மெய்ப்பாடு—புலன்பற்றிய உவகை.

பயன்—வரைவுமலிவு தோழிக்கு உரைத்தல்.

### கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்

இவன் ஓர் சேரவரசன். இவனைக் கடல் பிறக்கோட்டிய குட்டுவன் சேரலாதன் என்றும், சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் என்றும் கூறுவர். இவனைப் பாடிய புலவர் பரணர். இவர், குட்டுவன்மீது பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தைப் பாடி உம்பற் காட்டுவாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றார். இக்குட்டுவன் கடலோட்டிய வரலாற்றினை,

"கோடு நரல் பௌவங் கலங்கவேலிட், டுடைதிரைப்
பரப்பிற் படுகட லோட்டிய வேல்கெழு குட்டுவன்"
—(பதிற். 46)

"மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன், பொருமுரண் பெறுஅது விளங்கு சினஞ்சிறந்து, செருச்செய் முன்பொடு முன்னீர் முற்றி, யோங்குதிரைப் பௌவநீங்க வோட்டிய, நீர்மா ணெஃகம்"
—(அகம். 22)

"கொடும்போர் கடந்து நெடுங்கடலோட்டி" —(சிலப். 28-119)

"பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக்கோட்டி"—(சிலப். கட்டுரை 19) என்பவற்றாலறிக.

பரணர் என்னும் புலவர் இவனைக்குறித்து ஏர்க்களஉருவகம் பாடிப் பரிசில் வேண்டிநின்றார்.

இவனே சேரன் செங்குட்டுவன் ஆவன் என்பதைப் பதிற்றுப் பத்தில் ஐந்தாம் பத்தை யூன்றிப்படிப்பார் அறிவர்.

---

## இலண்டனிலும் உரோமா புரியிலும் தமிழ்ச்சங்கங்கள்

உரோமாபுரியில் வீரமாமுனிவர் தமிழ்ச்சங்கம் என்றபெயருடன் 1934-ஆம் ஆண்டில் ஒரு சங்கம் நிறுவப்பெற்று அதன் மூன்றாமாண்டு நிறைவு விழா சில திங்கட்குமுன் கொண்டாடப்பெற்றதாம். இலண்டனிலுள்ள தமிழ்ச்சங்கத்தார் சென்ற கலைமகள் விழாவைக் கொண்டாடினார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் ஏதாவது ஒரு பொருளைப் பற்றிப் பேசுபவர் தமிழிலேயே பேசுதல் வேண்டுமாம்.

## இரகுநாத நாயக்கர் (கி. பி. 1614—1644)

[திருவாளர் வித்துவான் கி. சாமிக்கண்ணு அவர்கள்]

**தோற்றுவாய்:**—இரகுநாத நாயக்கர், தஞ்சாவூர் நாட்டை ஆண்ட நாயக்க அரசவழியின் மூன்றாவது மன்னர். இவர் அச்சுதப்ப நாயக்கரின் குமாரர். நாயக்க மன்னர்களுள் இவரே பொன்றாப் புகழ்படைத்தவர்; இளமையிலேயே நன்றாய்க் கற்றுத் தேர்ந்தவர். இவருக்கு இவர்தம் தந்தையார் பட்டஞ்சூட்டு விழாவை நூன்முறைகளுக்கிணங்க நடத்தினார். தம் தந்தையாரின் அமைச்சராயிருந்த கோவிந்த தீட்சிதரையே தம் அரசாட்சியிலும் இவர் சிலகாலம் அமைச்சராகக் கொண்டிருந்தார். இவரது மனைவி, பாண்டியநாட்டரசனுடைய மகள். இவருக்கு விசயராகவ நாயக்கர், இராமபத்திர நாயக்கர் என இரண்டு மக்கள் இருந்தனர்.

**காலம்:**—தம் தந்தையாரால் இவர் கி. பி. 1614-ல் முடிசூட்டப்பட்டார். இவர் கி. பி. 1644 வரையில் செங்கோல் செலுத்தினார்.

**இறைமாட்சி:**—கர்நாடகக் காவலரான வேங்கடதேவர் கி. பி. 1614-ல் இறந்தார். அவருக்குப் பிள்ளையில்லாமையால் அவருடைய விருப்பப்படி அவரது உடன்பிறந்தான் மகன் பட்டத்துக்கு வந்தான். ஆனால் வேங்கடதேவருடைய மனைவியும் அவள் தகப்பன் சக்கராசனும் சூழ்ச்சிசெய்து புதிய அரசனைக் குடும்பத்துடன் தூங்கும்போது கொலைபுரிந்தனர். எனினும் கொலையுண்ட அரசனின் சிறுபிள்ளை ஒருவன் எஞ்சியிருந்தான். அச்சிறுவனை அரசனாக்க விரும்பி, யாசபூபதி என்னும் எச்சமநாயக்கன் என்ற படைவீரனுடைய தலைமையில் கர்நாடக மக்கள் சக்கராசனை எதிர்த்துப் போர்செய்யத் தஞ்சை யரசரைத் துணைவேண்டினார்கள். இரகுநாத நாயக்கர் அவர்களுக்குதவிசெய்து சக்கராசனை வென்று சிறுவனைக் கர்நாடக அரசனாக்கினார். தோல்வியுற்ற சக்கராசன் சொற்கேட்டுப் பாண்டியநாட்டரசன் காவிரியாற்றுக் கல்லணையை உடைத்துவிட்டான். ஆகவே, இவர், பாண்டியநாட்டரசன்மீது படையெடுத்துச் சென்று வாகை புனைந்தார். பின்னரே பாண்டியநாட்டரசன் தன் மகளை இவருக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

கல்வி நிலை :—பாரிசாதகரணம், களாப்பியுதயம், அச்சுதாப்பியுதயம், இராமயண சாரசங்கிரகம், மகாபாரத சார சங்கிரகம் முதலிய பல நூல்களை இவர் தாமே இயற்றினர். கற்றோர் பலரைத் தம் அவையிலிருக்கச்செய்து கல்வியைப் பரப்பினர். அமைச்சராகிய கோவிந்த தீட்சிதரைக்கொண்டு அரிவம்சசார சரித்திரம் என்ற காவியமும், சங்கீத சுதாநிதி யென்ற இசை நூலும் இயற்றுவித்தார். இவருடைய பேராதரவுபெற்று எஞ்ஞநாராயண தீட்சிதர், இவருடைய வரலாறு கூறும் சாகித்தியரத்னகர காவியம், இரகுநாத பூபவிசயம், இரகுநாதவிலாச நாடகம் ஆகியவைகளை இயற்றினர். வார்த்திகாபரணம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை ஆகியவைகளை யியற்றிய வேங்கடேசுவர தீட்சிதரையும், பல நாடகங்கள், பல காவியங்கள், பல அணிநூல்கள் முதலியவை இயற்றிய சூடாமணி தீட்சிதரையும் இரகுநாத நாயக்கர் ஊக்கினர். இவரது அரசாட்சிக்காலத்தில், குமாரதாதாசாரியர், தாம்செய்த பாரிசாதகரண நாடகத் துவக்கத்தில் தஞ்சாவூரையும் இரகுநாத நாயக்கரையும் புகழ்ந்துள்ளார். கீர்த்திமான் ஆற்றூரத்திலுள்ள கோனேரி ராயபுரத்திலிருந்த பாச்கர தீட்சிதர் இவருடைய ஆட்சியில் மிக்க செல்வப்பெருக்குற்றார்.

கடவுட்கோட்பாடு:—தம் தந்தையாரைப்போலவே இவரும் துலைபுக்கார். பொற்குதிரை, பொற்பசு, பொன்யானை முதலிய தானங்களும், ஆயிரங்கோதானமும் செய்தார். இராமசேது, திருவரங்கம், விசயராகவபுரம் முதலிய இடங்களில் இராமசாமி கோயில் கட்டிவைத்தார். அறச்சாலைகளில் வைகலும் இருபத்து நாலாயிரம் மக்கள் உணவுபெற ஏற்பாடு செய்தார்.

நாட்டினளவு:—இவரது நாடு சிராப்பள்ளிமுதல் குணகடல்காறும், இராமசேதுமுதல் பழமலை வரையிலும் பரவி யிருந்தது.

முடிவுரை:—இவர், தம் தந்தையாருதவிய நாட்டை யிழக்காமல், பாதுகாத்து முறை நிரம்பிய அரசு செய்து தம் குடிகளைக் காப்பாற்றினர்; தம் குடிப்பெயர் மேன்மேலோங்கச்செய்து நாட்டை வளமுறுத்தினர்.

# முற்கால நூல் நிலயங்கள்

[திரு. காழி. P. சுப்பையா அவர்கள்]

கல்வி ஞானம் எங்கெங்குப் பரவியிருக்கிறதோ ஆங்காங்கு அதற்கு அடிப்படையான நூல் நிலயங்களைப் பற்றியும் நூல் நிலய இயக்கத்தைப் பற்றியும் பேசி வருகின்றனர். ஒரு நாடு கல்விஞானம், மொழிவளர்ச்சி, ஆராய்ச்சி அறிவு, நாகரிகம் இவைகளில் முன்னணி பெறவேண்டுமானால் அதில் அரும்பெரும் நூல்நிலயங்க ளிருந்தாகவேண்டும். மேலும், மக்கள் தங்கள் பொது அறிவை வளர்ப்பதற்கும், தங்கள் நாட்டுப் பண்டைய வரலாறுகளையும் உலகத்து நிகழ்ச்சிகளையும் தெரிந்து கொள்வதற்கும் நூல் நிலயங்கள் இன்றியமையாதனவே. நூல்களைச் சேமித்து வைத்திருக்கச் செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலும் செய்யப்பட்ட பெட்டியெனவும், வேலையற்றோர்களுக்கும், செவிடு, ஊமை முதலிய குறைபுலனுடையோர்களுக்கும் ஓர் அடைக்கலமெனவும் இது காறும் கருதப்பட்டு வந்த நூல்நிலயம் இன்று உயிருக்கே அமைதியளிக்கும் பிணிதீர் மருத்துச்சாலையாக இருந்து வருகிறது. நூல் நிலயக்காரன் தேர்ந்த மருத்துவனாகவிருந்து, கல்வியறிவுச் சுடரால் கொளுத்தப்பட்டு அறியாமைப் பிணியைத் தீர்க்க அவ்விடம் நாடி வருபவர்களுக்குச் சிறந்த மருந்தாக நூல்களை யுதவுகிறான்.

இது நிற்க, இக்காலம் போலவே முற்காலத்திலும் கல்விச் செல்வம் உலகெங்கும் தழைத்தோங்கி இருந்ததென நாம் நூல்வாயிலாக அறிகிறோம். ஆகவே அக்கல்விச் செல்வத்திற்கு இன்றியமையாதனவெனக் கருதிவரும் நூல் நிலயங்களும் அக்காலத்திலு மிருந்திருக்கக்கூடும். ஏனென்றால் நூல் நிலயங்களின்றிக் கல்வி வளர்ச்சி யடைந்ததெனின் அஃது உயிரில்லாத ஒரு மனிதனை நினைப்பதொக்கும். ஆதலின், முற்காலத்தில் நூல் நிலயங்கள் எவ்வித நிலைமையிலிருந்தனவென இவண் ஆராய்வோம்:

## பாபிலோனியாவும் அஸிரியாவும்

பாபிலோனியாவும் அஸிரியாவும் அரேபியாவின் பண்டைய முக்கிய பட்டணங்களாகும். இந்நகரங்களை ஆராய்ச்சி செய்தவர்கள் கிறித்து பிறப்பதற்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே அங்கு நூல் நிலயங்களிருந்து வந்தனவாகக் கூறுகின்றனர். 1850-ல் திரு. லாயார்டு (Mr. Layard)

என்னும் ஆராய்ச்சியாளர் களிமண்ணாலாகிய பல சிறு தகடுகளைக் (tablets) கண்டு பிடித்தார். அவற்றில் ஆப்புரு வினவான (cuneiform) எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந் தன. இச்சிறு தகடுகள், அஸிரிய அரசனும் கல்வி வளர்ப் பவனுமாயிருந்த, அசர்பானிப்பால் (Assurbanipal) என்பவ னுடைய நூல் நிலயத்திலிருந்தனவாகக் காணப்படுகின்றன. அந்நிலயத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வெவ்வேறு வித மான நூற்றகடுளிருந்தனவென்றும் தெரிகிறது. இவையெல் லாம் ஒழுங்காக அடுக்கப்பட்டும் பட்டியில் எழுதப்பட்டும் அந்நாட்டு மக்களுக்குக் கல்வியறிவை வளர்க்கும் நோக்கங் கொண்டு கொடுக்கப்பட்டு வந்தனவாம். "அஸிரிய அரச னை அசர்பானிப்பாலினுடைய நூல் நிலயத்தில் ஒரு நூற் பட்டி (Catalogue) இருந்தது. அஃது இருபத்தைந்து சிறு தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்தது. உலக அறிவைப் புகட் டக்கூடிய பதினான்கு நூல்களும் சமய அறிவைப் புகட் டக்கூடிய பதினொரு நூல்களும் அதிற் காட்டப்பட்டிருந் தன" என W. C. பிரிக் ஸேயர்ஸ் (W. C. Brick Sayers) என்னும் துரைமகனார் தம்முடைய "நூனிலய வகுப்பினை" (Library classification) என்ற புத்தகத்தின் முகவுரையில் கூறுகிறார்.

## எகிப்து (Egypt)

இஃது ஆப்பிரிகாவின் வடகிழக்கிலுள்ள நாடாகும். இது கல்வி ஞானத்தில் தலைசிறந்து விளங்குவது. இத்தேசம் ஆதி காலம் முதற்கொண்டே நாகரிக மடைந்திருந்ததாகத் தெரி கிறது. இத்தேசத்தினின்றே உலகம் சீர்திருத்த மடைந்த தெனச் சொல்வது மிகையாகாது. இத்தேசத்தில் காணப் படும் இருதலைக் குந்தாலியும் (Pick axe) மண்வெட்டியும் (Shovel) சரித்திர காலத்திற்கு முந்திய பழங்காலத்து ஆயுதங்களைக் காட்டுகின்றன. இப்பழங் கருவிகளால் அங்கு அக்காலத்தில் நூல் நிலயங்களிருந்து வந்தனவெனக் கூற ஏதுவுண்டு. நூல் நிலயங்களெல்லாம் ஆலயங்கள் போல் கருதப்பட்டு வந்தன. நூல்கள், அவைகளுக்காகத் தனியாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் மட்டுமன்றிக் கல்லறைகளி லும் (tombs) வைக்கப்பட்டன. இவ்வாறு புகழ்பெற்ற நிலயங்களில் (institutions) மிகவும் சிறப்பையுடையது எகிப்திலுள்ள ஓஸிமாண்டியாஸ் நூல்நிலயம் (Library of Ozymandias) என்பதே. இம் மாபெருஞ் செய்திட்டத்தினு லேயே அப்பெயர் என்றுமழியாது இன்றும் நிலைத்திருக் கிறது.

### மெம்ஃபிஸ் (Memphis)

இஃது அமெரிக்க ஐக்கிய மாகாணத் (U.S.A.) திலிருந்த ஒரு சிறு பட்டணமாகும். இதில் பெரிய நூல் நிலயமொன் றிருந்தது. அதைப் பாரசீகர்கள் (Persians) நாசமாக்கினர்.

### அலெக்ஸாண்ட்ரியா (Alexandria)

அலெக்ஸாண்ட்ரியா எகிப்திலுள்ள ஒரு சிறந்த நகர மாகும். இந்நகரையாண்ட தாலமி (Ptolemy) என்னும் புகழ்பெற்ற அரசனுடைய ஆட்சியின்கீழ் இந்நகரம் நாமகளின் நாடேபோல் விளங்கிற்று. இந்நாட்டிலிருந்த நூல் நிலய மானது உலகத்திலுள்ள மற்றெல்லா நூல் நிலயங்களைக் காட்டிலும் தலைசிறந்து சீரும் சிறப்புமுற்று விளங்கிற்று. தாலமி பிலடல்பஸ், (Ptolemy Philadelphus) நூல் நிலயங் களுக்காக மாபெரும் கட்டிடங்கள் பல கட்டினான். அந் நிலயங்கட்கு நூல்கள் திரட்டும்பொருட்டு உலகத்தின் பல பகுதிகட்கும் தன் மனிதர்களை யனுப்பினான். அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவனும் நூல்கள் தொகுக்கவேண்டி அந்நாட்டிற்கு வந்துபோகும் வெளிநாட்டு மக்கள் வைத் திருந்த நூல்களை யெல்லாம் பறிமுதல் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இவ்வரசன் காலத்தில் இரண்டு பெரிய நூல் நிலயங்கள் இருந்தன. அவற்றில் 6,00,000 நூல்க ளிருந்தனவாம். உலகத்திலேயே சிறந்தவைகளெனக் கூறப் படும் ட்ரினிட்டி (Trinity), டப்ளின் (Dublin), லண்டன் (London) முதலிய பெரிய நகரங்களிலுள்ள நூல் நிலயங் களைவிடப் பெரியவை அலெக்ஸாண்ட்ரியாவி லிருந்த அவ் விரு நிலயங்களே. தாலமிகள் நூல் நிலயங்களில் கருத்துச் செலுத்திவந்ததைக் கண்ணுற்ற பெர்காமஸ் (Pergamus) அரசர்கள் தங்கள் நாடுகளிலும் போட்டியாகப் புத்தக நில யங்களை யேற்படுத்தினார்கள்.

### அட்டலாய் (Attalai)

இந்நகரத்திலும் ஒரு பெரிய நிலயமிருந்தது. இதில், இப்போது சென்னைப் பல்கலைக் கழக நிலயத்திலிருப்பதைக் காட்டிலும், நான்கு மடங்கு அதிகமான நூல்களிருந்தன.

### உரோமாபுரி (Rome)

எகிப்து தேசத்துத் தாலமிகளைப்போல உரோமாபுரி யில் ஜூலியஸ் வீஸரும், அகஸ்டஸூ மிருந்தனர். (Julius Caesar and Augustus). வாரோ (Varro) என்பவரை

ஜூலியஸ் ஸீஸர் நூல் நிலயத்திற்கு வேண்டிய நூல்கள் சேகரிப்பதற்கும் அவற்றை ஒழுங்காக அடுக்கிவைப்பதற்கும் அமர்த்தினார். வாரோ என்பவர் கல்வித் தேர்ச்சியுற்ற பண்டிதராதலின், அவர் "நூல் நிலயங்கள்" என்பதுபற்றி நூலொன்று எழுதினார். நூல் நிலயங்களில் சில சீர்திருத் தங்களைச் செய்து அவைகளைப் புதுப்பித்தார். அவர் செய்த சீர்திருத்தங்களிற் சிறந்தவை நூல் நிலயங்களில் புகழ்பெற்ற அறிஞர்களின் சிலைகளையும் (Statues) மார்பளவுள்ள உருவப் படங்களையும் (Busts) நிரப்பி வைத்ததேயாம். அகஸ்டஸ் காலத்திலும் நூல்நிலய இயக்கம் ஆதரவடைந்து வந்தது. ஆக்டேவியன் (Octavian), பாலட்டைன் (Palatine) என்னும் இரு பெரிய நூல் நிலயங்களை நிறுவியபுகழ் அகஸ்டஸுக்கே உரியதாகும். இவ்விரண்டும் அவனுடைய தமக்கையின் நினைவறிகுறியாகவும் அப்பாலோவின் நினைவறிகுறியாகவும் நிறுவப்பட்டன.

## இந்தியா (India)

மற்ற தேசங்களைப் போலவே இந்தியாவும் நூல் நிலய இயக்கத்தில் அரும்பாடுபட்டு வந்திருக்கின்றதெனச் சொல்லாமலே விளங்கும். ஸர் ஜான் மார்ஷல் (Sir John Marshal) முதலிய அறிஞர்களின் ஆராய்ச்சியால் இந்தியாவில் பழங்காலத்தில் பல நூல் நிலயங்கள் இருந்தனவென்று தெரிய வருகிறது. இதற்குத் தக்க ஆதாரங்களுமிருக்கின்றன. அக்காலத்தில் இந்தியாவில் சிறந்து விளங்கின பல்கலைக் கழகங்கள் தக்ஷசீலம், நாளந்தா, உஜ்ஜினி (Taxila, Nalanda and Ujjain) முதலிய இடங்களிலே இருந்து வந்தன. இந்நகரங்களிலிருந்த நூல் நிலயங்களெல்லாம் அலெக்ஸாண்ட்ரியா நிலயத்தின் மாதிரியே யாகும். நாளந்தா நகரத்து நூல் நிலயம் **இரத்தின சாகரம்** என்று அழைக்கப்பட்டு வந்ததே முற்காலத்தில் இந்தியாவிலிருந்த நூல் நிலயங்களின் மேன்மையை நன்கு விளக்கும்.

இந்தியாவிற்கு வந்த பிறநாட்டு மக்கள் தங்கள் ஊருக்குத் திரும்பும்போது இங்குள்ள நூல் நிலயங்களிலிருந்து வேதத்திற் கிசைவான பல நூல்களை (canonical literature) எடுத்துச் சென்றனர். முற்காலத்திய அரசர்களும் இவ்வித இயக்கத்திற்கு உதவி பல புரிந்து வந்தனர். இட்ஸிங் (Itsingh) என்பவர் இந்தியாவிலிருந்து சீனவுக்கு முதன் முதலாக ஐநூறு மொழிபெயர்ப்பு நூல்களை யனுப்பினார்.

# ஜார்ஜ் ஸ்டீபென்சன்

N. குழந்தைவேலன் B. A.

சற்றேறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்னர் மக்கள் ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்குச் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. அக்காலத்தில் இருப்புப்பாதைபோன்ற போக்குவரவிற்குரிய வசதிகள் குறைவாயிருந்தமையால் மக்கள் நெடுந்தொலைப் பயணங்கள் செய்யமுடியாது வருந்தினர். இப்பொழுது இருப்புப்பாதையின் உதவியால் குறித்த காலத்திற்குள் மிகத் தொலைவிலுள்ள ஊர்களுக்குப் போய்ச்சேருகிறோம். முதன் முதலில் இருப்புப்பாதையை ஏற்படுத்தியவர் ஜார்ஜ் ஸ்டீபென்சன் என்னும் பேரறிஞராவர்.

இவர் 1781-ஆம் ஆண்டில் ஆங்கில நாட்டின் நியூகாஸில் என்னும் நகரில் ஓர் ஏழைக்குடும்பத்தில் தோன்றினர். இவர் தம் தந்தையார் தமது மக்கள் எண்மரையும் காப்பாற்றுதற்குப்போதிய பொருளின்றிவருந்தினர். ஆகவே, ஸ்டீபென்சன் தமது எட்டாம் ஆண்டிலேயே கூலிவேலைக்குப்போக நேர்ந்தது. இவர் மாடுமேய்த்தும் உழவுதொழில்செய்தும் நாளொன்றுக்கு இரண்டுபென்ஸ் பெற்றுவந்தார். இவருக்குப் பதினறு ஆண்டு நிரம்புவதற்குள் ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைக்கு அமர்ந்து சுரங்கப்பொறிகளை (இயந்திரங்களை) ஓட்டுவதற்கு வாரம் பன்னிரண்டு பேன்ஸ் சம்பளம் பெற்றுவந்தார். இவர் தமது மேற்பார்வையிலிருந்த பொறிகளை ஆராய்ச்சி செய்வதில் மிகுந்த ஆவல்கொண்டிருந்தார். ஸ்டீபென்சன் சில வேளைகளில் அவற்றைத் துண்டுதுண்டாய்க் கழற்றிப்பார்த்து மீண்டும் பழையபடி பூட்டிவிடுவார். இதனல் அப்பொறிகளின் பல்வேறு பகுதிகளின் நுட்பங்களையும் அவற்றின் வேலைகளையும் இவர் நன்கு அறிந்துகொண்டார். ஆயினும் பொறிகளைப்பற்றிய எல்லா நுட்பங்களையும் தெரிந்துகொள்வதற்கு அவற்றிற்குரிய புத்தகங்களை ஊன்றிப் படிக்கவேண்டுமென்பதை இவர் உணர்ந்தார். ஆகவே ஸ்டீபென்சன் தமக்கு ஓய்வுகிடைத்த போதெல்லாம் கற்பதிலும் எழுதுவதிலுமே காலங்கழித்து வந்தார்.

ஒருநாள் அருகிலுள்ள ஒரு சுரங்கத்தில் ஊற்றுப் பெருக்கெடுத்து வெள்ளம் நிறைந்திருந்தது. சுரங்கத்தினின்றும் நீரை வெளிப்படுத்தும் நீருருஞ்சு பொறி சீர்கேடான நிலையிலிருந்ததால் எவரும் அதைச் செப்பமைப்படுத்த இயலாது தவித்தனர். அத்தொழிலிற் றிறமைவாய்ந்தோர் பலர் முயன்றும் அது வீணயிற்று. ஸ்டீபென்சன் பல நாட்களாய் இடைவிடாது உழைத்து முடிவில் அப்பொறியைச் செம்மைப்படுத்திச் சுரங்

* George Stephenson. † New-Castle.

கத்திலிருந்த நீரை உறிஞ்சும்படி செய்தார். இவர் மெய்வருந்திச் செய்த முயற்சிக்குக் கூலியும் கைமேல் கிடைத்தது. இவரது திறமையைச் சுரங்கத் தலைவர்கள் மிகவும் பாராட்டி இவரை ஒரு பெரிய சுரங்கத்திற்கு மேற்பார்வையாளராக அமர்த்தினர். அஞ்ஞான்று இவர்தம் புகழ் நாடெங்கும் பரவத் தலைப்பட்டது.

பெருஞ்சுமைகளை விரைவில் இழுத்துச்செல்வதற்கு ஏதேனும் ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று ஸ்டீபேன்சன் நெடுநாட்களாய் எண்ணிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் சுரங்கவேலை முடிந்தவுடன் இழுக்கும் ஆற்றல்நிறைந்த ஒரு நீராவிப்பொறியைக் கண்டுபிடிக்கவேண்டுமென முயற்சி செய்தார். அத்தகைய பொறி அமைக்கப்பெற்றால் தங்கள் சுரங்கங்களில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரியைக் குறைந்த செலவில் துறைமுகத்திற்கு அனுப்பிவிடலாம் என்பதையுணர்ந்த முதலாளிகள் ஸ்டீபேன்சனுக்குப் பொருளுதவிசெய்தனர். ஓராண்டுவரை ஆராய்ச்சிசெய்து முடிவில் ஸ்டீபேன்சன் ஒரு நீராவிப்பொறியைச் செய்துமுடித்தார். அது முப்பது டன் எடையுள்ள சுமையை மணிக்கு ஆறு கல் தொலைவு மேட்டுப்பாங்கான இடத்திலும் இழுத்துச்சென்றது. இதுவே அங்குள்ள மக்களுக்குப பெருவியப்பை உண்டாக்கிவிட்டது. ஏனெனில் இதைவிட விரைவாகச் செல்லக்கூடிய சுமைவண்டிகள் அக்காலத்தில் இல்லை.

சின்னாட்கழித்து நீராவிப்பொறியை இருப்புப்பாதையின் மேல் ஓட்டினால் அதன் விரைவு இன்னும் மிகுதிப்படுத்தல் கூடும் என்பதை ஸ்டீபேன்சன் உணர்ந்தார். உணரவே, இவர் தம்நண்பர்களின் உதவிகொண்டு 1885-ஆம்ஆண்டில் *ஸ்டாக்டன், †டார்லிங்டன் என்னும் இரண்டு நகரங்களுக்கிடையில் முதன்முதலாக ஓர்இருப்புப்பாதையை ஏற்படுத்தினர். இதன் வழிச்செலுத்திய புகைவண்டித்தொடர் பெருஞ்சுமைகளை மிக எளிதில் இழுத்துச்செல்வதைக் கண்டார். ஆயினும் அது மணிக்குப் பதினாறு கல் தொலைவுதான் ஓடிற்று.

மீண்டும் ‡லிவர்பூல் நகருக்கும் §மாஞ்செஸ்டர்நகருக்கும் இடையில் ஸ்டீபென்சன் பிறிதொரு பெரிய இருப்புப்பாதை அமைக்கத் தொடங்கினர். அப்பாதை சதுப்புநிலங்களின் வழியாகச்சென்றதால் தண்டவாளம் பதிப்பது மிகவும் கடினமாக இருந்தது. ஆதலால் அவ்விடங்களைக் கற்களாலும் மரக்கட்டைகளாலும் நிரப்பி நிலத்தை இறுகச்செய்து அதன்மேல் இருப்புப் பாதையை அமைத்தார். இதன் உண்மை உணரமாட்டாத மக்கள் ஸ்டீபென்சனது அருந்தொண்டுகளை இழித்

*Stockton †Darlington ‡Liverpool §Manchester

துப்பேசி நகையாடினர். அவர் கண்டுபிடித்த நீராவிப்பொறி சூட்டினால் வெடித்துப் போகுமென்றும், அஃது இழுத்துச் செல்லும் வண்டித்தொடர்களையும் பிரயாணிகளையும் நொறுக்கித் தள்ளி விடுமென்றும் சிலர் கூறினர். இன்னுஞ்சிலர் புகை வண்டியினின்று கிளம்பும் தீப்பொறிகள் பாதையோரங்களிலுள்ள ஊர்களையெல்லாம் கொளுத்திவிடுமென அஞ்சினர். மற்றுஞ்சிலர் நீராவிப் பொறியினால் ஏற்படும் புகை நஞ்சுப் பொருள் நிறைந்ததென்றும், அப்புகை வயல்களில்மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுமாடுகளைக் கொன்று விடுமென்றுங் கூறிப்போந்தனர். நீராவிப்பொறிகளும் புகைவண்டிகளும் பீரங்கிகளைப்போன்று உயிருக்குத் தீங்கு விளைவிப்பன வென்றும் அவற்றை நம்பி ஏமாந்து போகவேண்டா மென்றும் புதினத்தாள்களெல்லாம் எச்சரிக்கை செய்தன. ஸ்டீபென்சன் சிறிதும் ஊக்கம் குன்றாது இருப்புப்பாதையை ஒருவாறாகப் போட்டு முடித்தனர். புகைவண்டித் தொடரை முதன் முதலில் நாட்டுப்புறங்களிற் செலுத்தியபொழுது மக்கள் பலர் அதை ஒரு பெரும் பூதமெனக்கருதி அஞ்சினரென்றும், அது சினக்குறிகளுடன் தங்களை நோக்கி ஓடி வருவதாக எண்ணி நடுநடுங்கினரென்றும் கூறப்படுகிறது

நீராவிப்பொறியின் பெரும்பயனை மக்கள் நன்குணர்வதற்குச் சிறிதுகாலஞ்சென்றது. 1830-ஆம் ஆண்டில் அப்பொறியை மிகச்சிறந்த முறையிற் செய்து முடிப்பவருக்கு ஐந்நூறு பவுன் பரிசளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அறிஞர் பலர் இப்பரிசுபெற விரும்பித் தம்மாலியன்ற அளவு முயற்சி செய்து நீராவிப்பொறிகள் அமைத்தனர். ஒன்றரைக் கல் நீளமுள்ள இருப்புப்பாதையில் முறையே ஒவ்வொரு பொறியையும் முன்னும் பின்னுமாகப் பத்துமுறை ஓட்ட வேண்டுமென்றும், இடையே பொறியிற் கோளாறு ஏற்பட்டு நின்றுபோய்விடில் பந்தயத்தை இழந்து விடவேண்டுமென்றும் முடிவுசெய்து நாள் குறிப்பிட்டிருந்தனர். குறிப்பிட்ட நாளில் மக்கள் திரள்திரளாகக் கூடி வேடிக்கை பார்க்க வந்திருந்தனர். ஸ்டீபென்சனால் அமைக்கப்பெற்றிருந்த புதிய நீராவிப்பொறியே பத்து முறையோடு நில்லாமல் இருபதுமுறை முன்னும் பின்னுமாக ஓடிற்று. அதுவுமன்றி அப்பொறி தன்னைப்போல் மும்மடங்கு சுமையை இழுத்துக் கொண்டு மணிக்கு முப்பது கல் தொலைவு விரைந்து சென்றது. இதோடு போட்டியிட்ட ஏனைய பொறிகள் மணிக்குப் பத்துக் கல்லேனும் போகமாட்டாது இடையிலேயே நின்றுவிட்டன. ஆதலின் ஸ்டீபென்சனுக்கே அப்பரிசு வழங்கப்பெற்றது. அவ் அரிய பரிசுபெற்ற நீராவிப்பொறிக்கு (Rocket) வேடிகுண்டு எனப்பெயர் சூட்டினர்.

ஸ்டீபென்சனால் ஏற்படுத்தப்பட்ட லிவர்பூல் மாஞ்செஸ்டர் இருப்புப்பாதை 1830-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 16-ஆம் நாள் திறக்கப்பெற்றது. ஸ்டீபென்சன் துறைமகனாரே அப்புகைவண்டியைச் செலுத்தினார். வண்டித் தொடர்கள் பூக்களாலும் பிறவற்றாலும் மிகவும் அழகுபெற ஒப்பனை செய்யப்பெற்றிருந்தன. ஆங்கிலப் பேரறிஞர் பலர் முதன் முதலாகப் இப்புகைவண்டியில் ஏறிச்சென்றனர். ஆதலால் அவ்வண்டி விரைந்து செல்வதைக்கண்டு அனைவரும் இறும்பூதெய்தினர். இதன்பின் புகைவண்டியின் பெருமை ஆங்கில நாடெங்கும் பரவியது. சில ஆண்டுகளுக்குள் எங்கு பார்த்தாலும் இருப்புப்பாதைகள் அமைக்கப்பெற்றன. தொலை வழிச் செல்வதற்கு மிகவும் இன்றியமையாததாகிய இப்புதிய வசதியைக் கையாள்வதில் ஏனைய நாடுகளும் முனைந்து நின்றன.

துவக்கத்திற் பிரயாணிவண்டிகள் மூடியின்றி மேலே திறந்திருந்தன. செல்வர்கள் தங்களுக்கே உரிமையான வண்டிகள் செய்து அவற்றை வேண்டும்போது புகைவண்டித் தொடரில் இணைத்துப் பிரயாணம் செய்து வந்தனர். நாளடைவில் புகைவண்டிகள் மிகச்சிறந்த முறையிற் செய்யப்பெற்று உண்பதற்குப், உறங்குவதற்குங்கூட அதிற் பல வசதிகள் ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றன. இபபோது மணிக்கு எண்பது கல் தொலைவுக்குமேல் விரைந்து செல்லக்கூடிய புகைவண்டிகள் ஓடுகின்றன. இவ்வண்டிகளினுதவியால் நாம் மலைகளைத் துளைத்தமைத்த வழிகளின் ஊடேயும், யாறுகளைத் தாண்டியும், பள்ளத்தாக்குகளைக் கடந்தும் மிக எளிதிற் செல்லுகின்றோம். இவையனைத்தையும் தமது தளரா ஊக்கத்தால் எமக்கு எளிதாக்கித்தந்த ஜார்ஜ் ஸ்டீபென்சனுக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஏழைக்குடியிற் பிறந்த ஸ்டீபென்சன் தம் அறிவியன்முயற்சியினால் ஆங்கிலப் பொறிவலாளராக விளங்கி உலகத்தார்க்கு அளவிலாப் பெருநன்மைகளைச்செய்து மங்காப் பெரும்புகழடைந்தனர். இவர் தம் அருமைத்திருமகனார்*ராபர்ட் ஸ்டீ பென்சன் தம் தந்தையாரைப்போலவே சிறந்த பொறிவலாளராகி லிவர்பூல் மாஞ்செஸ்டர் இருப்புப்பாதை போடும்போது தம் தந்தையார்க்குத் தம்மாலியன்ற உதவியைச்செய்தார். இவர் பல்வேறு இருப்புப்பாதைகளை ஏற்படுத்தியும் அரும் பெரும் பாலங்களைக் கட்டியும் தமது புகழை நிலைநாட்டினார். ஜார்ஜ் ஸ்டீபென்சன் தன் மகன் தனக்காற்றிய உதவியை நேரிற்கண்டு களித்து 1848-ஆம் ஆண்டில் தமது 67-ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

---

# ஆராய்ச்சிப் பகுதி : Research

## இளங்கோவும் பாவிகமும்

[வித்துவான் S. ஆறுமுக முதலியார், எம். ஏ., எல். டி.]

(முன் கச0-ம் பக்கத் தொடர்ச்சி)

21. மேலும் கற்புடை மகளிர் தம் கணவர் எந்நிலையி லிருப்பினும், எக்குற்ற முடையராயிருப்பினும், இயற்கையி லேயே தம்மாட்டுள்ள கருணை மிகுதியால், அக்குற்றங்களை யெல்லாம் மன்னித்து விட்டு, அவர்களைத் தம்மாருயிரினு மினி யராய்க் காதலிப்பர். ஈருடல் ஓருயிராகின்றனர். அவரின்ப துன்பங்களைத் தம்மதாகப் பாவித்துப் பங்கிட்டு அவற்றை ஏற்றுக்கொள்வதே கற்புடை மகளிரின் தன்மையாம். "தற் காத்துத் தற்கொண்டாற் பேணி, தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்," என்பது திருவள்ளுவரின் பெண்மைச் சித்திரம். தோன்றற்குந் தோகைக்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே யென்று வாதவூரடிகளுங் கூறியுள்ளனரே! இவர்கள் தங்கணவரையே தெய்வமாகப்பாவித்துத்தொழுவர். தெய்வந் தொழாது கொழுநற் றொழுதெழும் பெண் பெய்யென மழை பெய்யும் என்பர் பெரியோர். இதேபோன்று கணவரும் தம்மனைவியரை நேசிப்பது இயல்பு என்பதை மறுப்பாரு முளரோ?

22. இக்குணங்கள் எல்லாம் கண்ணகிபாலும் அவள் தன் கணவனிடமும் நிறைந்துகிடந்தன. கண்ணகியின் தோழி யாகிய தேவந்தி, கோவலனைப் பிரிந்து கண்ணகி வருந்தும் நிலையில்,

"சோமகுண்டஞ் சூரிய குண்டந்துறை மூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநா
ளாடுதும்"

என்று அறிவுறுத்தினள். ஆனால், கற்புடைத் தெய்வமாகிய கண்ணகி, அது "பீடன்று" என்று வாளா இருந்தனள்.

"இன்னிசை யெழிலியை யியம்பவு மிசைவதோ
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மியைவதோ"

என்ற பாலைக்கலியடிகள் இங்கு ஒப்பிட்டு நோக்குதற் குரியன.

23. கண்ணகி, தன் கணவனைத் தெய்வமாகக் கருதியதோடு தன் ஆருயிர்த் துணைவனாகவும், தன் உள்ளன்புக்குரியவனாகவுங் கருதியிருந்தாள். பொருளைத் தொலைத்தாலென்? பரத்தையின்பாற் பிரிந்தாலென்? தன்னுள்ளத்தைக் கவர்ந்த கள்வனன்றோ கோவலன்? எவ்வாற்றானும் மனந்திரும்பி, மீட்டுந் தன்பால் வந்துவிடுவான் என்பதே அவள் எண்ணம். கண்ணகியும் கோவலனும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த அன்புக்கு எல்லையுமுண்டோ? அது கரையிறந்தது. அதை ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளால் விளக்குதும். பரத்தையின்பாற் பிரியாததன்முன் காதலரிருவரும் ஒருவரையொருவர் காதலித்த விதத்தையும், அன்னார்தம் இன்பம் பொருந்திய இல்வாழ்க்கையையும் மனையறம் படுத்த காதையில் மிகக் காணலாகும். கோவலன் தன் ஆருயிர்க் காதலியைப் பார்த்து,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா யமுதே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையால்"..........

என்னும் காதல் கனிந்த மொழிகளால் அவள் அன்பு நலத்தையும், அழகையும், குணமென்மையையும் புகழ்கின்றான். இதே அன்பைக் கண்ணகியும் கோவலன்மாட்டுச் செலுத்தினாள் என்று கூறவும் வேண்டுமோ?

24. கோவலன் பரத்தைபாற் பிரிந்தபின்பு கண்ணகியின் தோற்றமும் அவள் அன்பு நிலையைப் புலப்படுத்தும். அவனையே நினைந்து நினைந்து நெக்குருகும் கண்ணகி, தன் கணவன் செயலைப் பிறருக்குக் கூறினாளல்லள். தன் வருத்தமிகுதியை வெளிப்படுத்திக்கொள்ளாது, தன் மாமன் மாமியருமறியாது மறைத்து வைத்த பெருமை அதைவிடச் சீரியதாம். அதோடு கணவன் சென்ற விடமெல்லாம் தானும், இடையூறுகளைக் கவனியாது உடன்சென்றாளன்றோ. இச்செயல்களையெல்லாம் கம்பரின் காவியத்தில் சீதையின் செயல்களோடு ஒப்பிட்டுப் படித்தின்புறுவர் காவியநலந் துய்ப்போர்.

25. அடுத்து மதுரைக்குச் செல்வோம். மாதரி வீட்டில் காதலரிருவரும் உண்டபின், கோவலன் சிலம்பு விற்பதற்குப்

பிரிகின்றான். இச்சமயத்துக் கூறப்படும் செய்திகளைப் படிப்போர் தம் உள்ளத்தைப் பறிகொடுப்பது திண்ணம். கடைசியாகக் காதலர் பிரிகின்றனர். பிரிந்தவர் பிறகு கூடிஞரில்லை. பிரியும்போது பிரியா விடைபெற்றுச் செல்கின்றான் கோவலன். "உள்ளகம் வெதும்பி வருபனி கரந்த கண்ணனு"கிப் பிரிந்து சென்றான். இத்தருணத்து இவர்கள் உரையாடல்கள் இவர்களின் உள்ளங்களினூடு பாய்ந்து செல்லும் அன்பு வெள்ளத்தை விளக்குவனவாம். பின்னர், கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேள்வியுற்றாள் ஒருத்தி குரவையாடு மிடம் போந்து, நிகழ்ந்ததனை வாக்காற் சொல்லலாற்றாதவளாய், மெய்ப்பாட்டாற் புலப்படுத்தி நின்றபொழுது கண்ணகியின் மனம் உடனே கோவலனைக் குறித்து நடுங்கியது.

"நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்
அன்பனைக் காணுது அலவுமென் னெஞ்சன்றே
அன்பனைக் காணு தலவுமென் னெஞ்சாயின்
மன்பதை சொன்னதெவன் வாழியோ தோழி"

என்று கலக்கமுற்றாள். கொலையுண்டதைக் கூறக்கேட்ட பிறகு கண்ணகி, "பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழி கதிர்த், திங்கள் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச், செங்கண் சிவப்ப அழுதாள் தன் கேள்வனை, எங்கணு என்ரு இனைந்தேங்கி மாழ்குவாள்." பின்னும், தம்மோடு இன்புற்ற தம் கணவர் எரியின்மூழ்க, அவரோடு தாமும் மூழ்காது, துன்புறும் தன்மையதாகிய கைம்மை நோன்பு நோற்று இடர்ப்படும் உயவற் பெண்டிரைப்போல, "அன்பனை இழந்தேனுகியான் இருந்தழுவாள் ஒருத்தியோ" என்று புலம்பினுள். இவையெல்லாம், கணவன்பால் அவட்கிருந்த அன்பின் திறத்தைத் தெரிவிப்பனவாம்.

26. கண்ணகி கணவன்மீது மட்டும் அன்புடையளாயிருந்து, அவன் பெற்றோர்களை அவமதித்தனளோ? அன்று. அது கற்புடைமகளிர்க் கழகல்ல. அவர்களிடத்தும் அன்பு கொண்டொழுகி, கண்ணகி அன்னுரையும் பேணினள் என நாம் அறிகின்றோம். இல்லறக் கடன்களில் இழுக்கியாளானேன் என்று கண்ணகி வருந்தியதாக வைக்குமிடமொன்றில், தன் மாமன் மாமிகளைப் பேணும் பேற்றையும் இழந்ததாக ஏங்கிக் கண்ணகி இரங்கியது, சிறப்பாக இக்காலத்துப் பெண்கள் நோக்கத்தகுந்ததொன்றாம். எத்துணைக் குடும்பங்களில் இக்காலத்து மாமி மருகி மனவேற்றுமைகளினுலும், ஒருவருக்கொருவர் செய்யுங் கொடுஞ் செயல்களாலும் பூசல் விளைந்து, இல்லறத்தின் மாட்சியும், தெய்வத்தன்மையும் பயனும்

குலைந்து அறம் கொல்லப்படுகிறது. குடும்பத்தில் ஒற்றுமையின்றி மனைவியும் கணவனும் ஒத்த அன்புடையராயிருந்தும் யாது பயன்? இல்லறமெங்கே! சுகமெங்கே! மாதரி வீட்டின் கண்ணின்றும் சிலம்பு விற்கக் கோவலன் புறப்படுமுன்னர், கழிந்ததற்கிரங்கிய கண்ணகி, கோவலனைப்பார்த்து,

"............................................................நும்
பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தான்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்,
முந்தை நில்லா முனிவிகந் தனனா
வற்புளஞ் சிறந்தாங் கருள்மொழி யளைஇ
எற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமும் நொடிவது போலுமென்
வாயின் முறுவற் கவருள்ளகம் வருந்த,"

நீர் போற்றா ஒழுக்கத்தை மேவினீர் என்று கூறினாள். இங்கே கோவலனுடைய தாயும் தந்தையும் தம்மகனைக் குறித்து வருந்துதலின்றிக் கண்ணகியுற்ற துன்பத்திற்கே வருந்துதலும் அவளது பொறையைப் பாராட்டுதலும் அவர்களின் உயர் குணத்தைப் புலப்படுத்துகின்றன. "மாமன் மாமிகளாயுள்ளோர் தம் மருகி திறத்து எத்தகைய அன்புடையராயிருக்க வேண்டுமென்பது இதனாற் பெறப்படும். கண்ணகியோ தனக்குண்டான வருத்தத்தைச் சிறிதும் கருதாது, தன் மாமன் மாமிகளுக் குண்டாய வருத்தத்திற்கு இரங்குகின்றாள். இதைப் பார்க்கினும் அவள் உயர்குணத்திற்கு வேறு என்ன சான்று வேண்டும்?"

27. தொடர்புடையார்கண் அன்புடையளாய கண்ணகி பிற உயிர்களிடத்தும் காரணமின்றி இயல்பாகவே செல்லும் அருளுடையாளா யிருந்தாளென்றும் நாமறிகின்றோம். இதுவே கற்புடைத் தாய்மார்களுக் கழகாம். காதலிருவரும் கவுந்தியடிகளோடு காவிரியின் தென்கரையை யடைந்து ஒரு பொழிலகத்து இளைப்பாறியிருந்தபொழுது ஆண்டுச் சென்ற வம்பப்பரத்தை யொருத்தியும் வறுமொழியாள னொருவனும் கோவலன் கண்ணகியைப் பார்த்துச் சில தகாத வார்த்தைகளைக் கூறக்கேட்டுச் சீற்றங்கொண்ட கவுந்தி அவர்களைக் குறுநரியாகும்படி சபித்தனர். ஆனால், இதைக்கண்ட கண்ணகியுங் கோவலனும் நடுநடுங்கி அவர்களுக்காகப் பரிந்துபேசி அவர்களுக்கு உய்திக்காலம் உரைக்கவேண்டுமென்றும் கவுந்தியை வேண்டினர். இந்நிலையிற் பிறராயிருப்பின் அடிகள் செய்தது பொருத்தமுடையதே என்று கருதி மகிழ்வுற்றிருப்பார். கண்ணகியோ தம்மால், பிறருக்கு ஒரு துன்பம் நிகழ்ந்ததே என்று வருந்தி அதற்காக இரங்கினாள்.

"நெறியி னீங்கியோர் நீரல கூறினும் அறியாமையென் றறிதல் வேண்டும்," என்று அவ்விழி பிறப்புற்றோர்க்காகப் பரிந்தும் பேசினாள் பெண்தகைமைசான்ற கண்ணகி. அவளு டைய உயர்ந்த மனப்பான்மையும், பிற உயிர்கள் மாட்டுக் காட்டிய அருளும் சிறந்து விளங்குமிடம் இதுவன்றோ?

இனி, இல்லறமாகிய நல்லறம் நடத்தும் கற்புடை மகளிர்க் குரிய கடமைகளையும் கண்ணகி நன்கறிந்திருந்தாள். தான முறைப்படி கணவனோடு இருந்து இல்லறம் நடத்தி இல்லறக் கடமைகளைச் செம்மையாய் ஆற்ற முடியவில்லையே யென்று வருந்தின இடமொன்றை ஆசிரியர் அமைத்து, அவள் அவற் றை நன்கு அறிந்திருந்ததையும், கோவலனைப் பிரிந்து இருந்த நாட்களில் அவள் மனநிலை இருந்த விதத்தையும் நமக்குக் காட் டிச் செல்கின்றார். இங்கும் கண்ணகியை மாதரி வீட்டில்காண் கின்றோம். கோவலன் தன் மனைவியைப் பார்த்து, "உனக்கு யான் இழைத்த இடுக்கண்கள் எண்ணில. மண்மகளறிய நின் வண்ணச் சீரடிகள் வருந்த கல்லதரத்திற் பலகாவததூரம் நின்னை நான் நடத்திக் கூட்டி வந்தேனே! இது வல்வினைப் பயனோ," என்று வருந்தியபோது, கண்ணகி, வழிநடை யினாலும், வறுமையினாலும் உற்ற துன்பத்தைவிட இல்லறக் கடமைகளின்றும் வழுவியதனாலுறுந்துன்பமே பெரிதெனக் காட்டினள். "யான் உம்முடன் வந்தது கற்புடை மனைவி செய்யவேண்டுவதே. ஆனால், இல்லறக் கடமைகளினின்றும் வழுவித் தாங்கள் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்," என்று தன் கணவனுக்கு அறிவுறுத்தினாள்.

> "அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க் களித்தலுந் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை,"

என்பன கழிபே ரிரக்கத்தால் வெளிப்பட்ட கூற்றுக்கள். மேலும், "நும் பெற்றோர்கள் உள்ளகம் வருந்தவும் நீர் 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்'," என்றாள். இச்சமயத்துக் கண்ணகி உண்மைக்கு மாறாகமலும், சமயம் நேர்ந்துழி கண வன் தன் பிழையை நன்குணரும்படி செய்து அவனைத் திருத்த வேண்டிய தன் கடமைக்கும் கற்புக்கும் பொருந்தவும், கண வனுக்கு இன்னமை மிகுதற் கேதுவாகாமலும், தன் மனையறம் ஆற்றப்படாமைக்கு வருந்திக் கூறுவது படிப்போர் உள்ளத் தைக் கொள்ளைகொள்ளுவதோடு, அவள் கற்பு மேம்பாட்டை யும் விளக்குகின்றது. அப்போது கோவலனது உள்ள நிலையை யாரே கணித்தறிய வல்லார்? அவனுக்கு மனமாற்றம் திண்ண மாய் ஏற்பட்டிருக்கவேண்டும்.

"சிலம்புள கொள்ளும்," என்று கூறியபோதே, அது பசுமரத்தாணிபோற் பதிந்திருக்கவேண்டும். ஆயினும் பயனென்? ஊழ்வினை அவனைப் பிடர்பிடித்துந்தி மதுரைக்கும், பின் கொலைக்களத்திற்கும் அழைத்துக்கொண்டு செல்கின்றது. இதனை யாரே தடுக்கவல்லார்? மேற்கூறிய மனையறங்களெல்லாம் ஒத்த அன்பினராய தலைவனுந் தலைவியும் சேர்ந்து செய்ய வேண்டுவன. தனியாயிருந்ததனால் இவற்றை ஆற்றமுடியவில்லையே என்று வருந்துதல் கற்புடை மகளிர்க் கியல்பே. கற்புக்கரசியாம் சீதாபிராட்டியும் இலங்கையில் சிறைவைக்கப் பட்டிருந்தபோது இவ்வாறே இல்லறக் கடைமைகளில் வழுவ நேர்ந்ததே என்று வருந்தியதாகக் கவியரசர் தீட்டிய செய்யுள் ஓவியம் நம் மனக்கண்முன்னே வந்து நிற்கின்றது. அதனை இதனோடு ஒப்பிடலாம்.

" அருந்து மெல்லட காரிட அருந்து மென்றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென வெதும்பும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்றுமயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண்டெழாதாள்,"

என்பதே கம்பரின் ஓவியம்.

இவ்வாறே கண்ணகியின் கற்பெனப்படும் பாவிகம் நூல் முழுவதும் ஊடுருவிச் செல்வதைப் பார்க்கலாம். கண்ணகியின் கற்புடைமை நூலின் முதலிலிருந்து முடிவுவரையில், பலவழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டுக் காவியத்தினின்றும் பிரிக்க முடியாத பண்பாய், நடுநாயகமாய் விளங்குகின்றது. கண்ணகியின் கூற்றுக்களாலும் கோவலன், கவுந்தியடிகள், மாதரி, ஐயை முதலிய பலரின் உரையாடல்களாலும், ஆசிரியர் தம் கூற்றுக்களாலும் இன்னோரன்ன வேறு சில முறைகளாலும் இக்கற்புடைமை நமக்கு அறிவிக்கப்படுகிறது. கவுந்தி கோவலன் ஆகிய இருவர்களின் கூற்றுக்களிலிருந்து கண்ணகியின் கற்புடைமைக்கு இரண்டு சான்றுகள் தந்து கட்டுரையை முடிப்பாம். மாதரிபால் கண்ணகியை அடைக்கலமாகக் கவுந்தியடிகள் அளிக்கும்பொழுது, கண்ணகியின் கற்புக்குச் சான்றுபகர்கின்றார் :—

"கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்கு துயரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"

என்பது அவர் சான்று. இம்மொழிகள் தூய துறவொழுக்கத்தில் நின்ற கவுந்தியடிகளின் வாய்மொழிகளாம். கண்ண

கியின் ஆருயிர்க்காதலனும் அவள் கற்பு மேன்மையை உணர்ந்து சான்று பகர்கின்றான்.

"நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
வென்றொடு போர்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்"

என்று அவளைப் போற்றுகின்றான்.

---

## கல்வி பயிற்றுமுறை நாட்டுமொழியிலா ஆங்கிலத்திலா?

### [ஹானரபிள் ஸர் பிரோஸ் சேத்னா]

"கீழைநாட்டு மொழிவளர்ச்சிக்கென்று தனிப்பட்ட ஒரு திட்டத்தை நீங்கள் வகுத்துள்ளீர்கள். இஃது உண்மையிலேயே பாராட்டற்குரிய தொன்றாகும். ஏனைய இந்தியப் பல்கலைக் கழகங்களும் இம்முறையை விரைவிற் பின்பற்றுமென உண்மையாய் நம்புகிறேன். இந்தியத் "தேசீயம்" நாட்டுப் பொதுமொழியொன்றை நிறுவ விழைகிறது. 'தேசீய' இயக்கமென்ற ஒன்றிற்கு "தேசீய"ப் பொதுமொழி ஒன்று இன்றியமையாததே; ஆகவே இந்தியப் பெருநாடனைத்திற்குமே பொதுப்படையான ஒரு மொழியும் அம்மொழியிலியன்ற இலக்கியமும் இருத்தல் வேண்டுமென்ற நோக்கம் இயற்கையா யெழுவதொன்றே யாகும். ஆனால், இந்நோக்கம் எளிதிற் கைகூடுவதொன்றன்று. தென்னிந்திய மொழிகளை யெடுத்துக்கொண்டு பார்த்தாலோ, அவை தனிப்பட்ட ஓரினத்தைச் சேர்ந்தவை. எனவே, இந்நாடனைத்திற்கும் ஏற்றதும் பொதுப்படையானதுமான மொழி யொன்றைக் கொள்வதென்பதும் அம்மொழியிலேயே இலக்கியங்களை யாக்கிக்கொள்வதென்பதும் இயலுமோ என்பது ஐயப்பாட்டிற்குரியதாகும். பல்கலைக் கழகங்கள் நிறுவப்படத் தொடங்கியகாலத்தில் நாட்டுமொழி வளர்ச்சி ஏற்றவாறு கண்காணிக்கப்பட்டு வந்ததென்பது உண்மையாயினும் வரவர அச் சீரியகொள்கை கைநழுவவிடப்பட்டு நாட்டு மொழிப் பயிற்சி எடுப்பாரும் பிடிப்பாருமின்றிப் புறக்கணிக்கப்பட்டு வருவதாயிற்று.

"இஃதிவ்வாறாக, இவ் (அண்ணாமலை) பல்கலைக்கழகத்தார் தொடக்கத்திலிருந்தே **தமிழ்மொழியையும் தமிழிலக்கியத்தையும் வளர்க்கவேண்டும்** என்ற குறிக்கோளின் சிறப்பியல்பை யுணர்ந்துகொண்டமை மகிழ்தற் குரியதொன்றாகும். தமிழுக் கென்றே ஒரு தனித்துறை வகுக்கப்பட்டு அதன்கண் ஆராய்ச்


சிக்கெனப் பல வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன; தமிழ் மொழியிலும் தமிழிலக்கியத்திலும் தேர்ச்சியுற்றுத் திறமை தெரிப்போர்களுக்கு "வித்வான்" என்ற பட்டமும் வழங்கப் பட்டு வருகிறது.

"இவையெல்லாம் மிகவும் சீரிய முறைகளே. எனினும், நாம் இக்காலை யிருக்கும் நிலையில் இந்நாட்டிற்கு ஆங்கிலமொழி யும் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகும் என் பதை எவரும் மறுக்கமுடியாது. இன்னும் வருங்காலத்தி லும் ஆங்கில மொழி இன்றியமையாது வேண்டப்படுவதொன் றாக இருந்தே தீரும். அம்மொழி வளர்ந்துசெல்லும் விரைவை நோக்கின், உலகமுழுதுமே ஒரு காலத்தில் ஆங்கில மொழி யையே பேசக்கூடும்; இப்பொழுதுகூட அது பரவியுள்ள பரப்பை நோக்குமிடத்து உலகத்தைச் சுற்றிவர விழைவோர்க் குறுதுணையான மொழியாக அதைத் தவிர வேறொன்று வேண்டுவதின்றெனக் கூறலாம். ஸர் எட்வின் ஆர்னல்டு என்பவருடன் பேசிக்கொண்டிருந்த காலையில் டெனிஸன் பிரபு ஒரு முறை பின் வருமாறு கூறினாராம்:—'ஆங்கிலம் எக்காலத்திலும் பேச்சுவழக்கிலுள்ள ஒருமொழியாக இருக்கு மென்பதை நினைத்தால், அது நமக்கு நலந்தருவதொன் றன்று என்ற முடிபிற்கேவரல்வேண்டும்; ஏனெனில், அவ்வாறு பேச்சுவழக்கி லிருக்கவிருக்க அது மாறிக்கொண்டேபோகும்; போகவே, நீங்களும் நானும் எழுதியவை படிப்போருக்கு, இன்று சாஸர் இருப்பதுபோன்று, ஒரு காலத்தில் கடின மானவையாய் விளங்காதிருக்கக்கூடும் என்பதே'. சாஸர் என்று குறிப்பிட்ட பண்டைய ஆங்கிலப் புலவரைப்பற்றி ஆர்ட்டெம்ஸ் வார்டு என்ற பெரியார் 'அவர் புகழ்மிகுந்த புலவர்தான்; எனினும் (ஆங்கிலத்தைப்) பிழையிலாதெழுதுவ தென்பது அவருக்குத் தெரியவே தெரியாது' என்று கூறியுள் ளமை நினைவிருக்கக்கூடும். ஆங்கிலம் மாறிக்கொண்டேபோகி றதோ இல்லையோ என்பது ஒருபுறமிருக்கட்டும். இற்றைக் காலத்திற்கு ஆங்கில மொழியானது பண்டைக்காலத்தில் கிரே க்கமொழி எவ்வாறிருந்ததோ அவ்வாறிருக்கிறது. அம்மொழி யின் அளப்பிலாவாற்றலும் கவர்ச்சியும் அதன் உரப்பொலியி லும், அதன்பேராற்றல் அதன் உயிர்ப்பொலியிலும், அதன் மாட்சி அதன் அடைமொழிப் பெருக்கத்திலும், அதன் சிலே டைத்திறன் அதன் சொல்வளப்பத்திலும், அதன் பெருமை சொற்சுருக்கத்திலும், செறிவிலும் அமைந்துள்ளனவென்று கூறுவதுண்டு. ஆகஸ்போர்டு ஆங்கில அகராதியில் மட்டும் 4,00,000 சொற்கள் எடுத்தாராயப்பட்டு வரையறுக்கப்பட் டுள்ளன. வேறெம்மொழியிலுள்ள அகராதிகளிலும் இத்தனை

சொற்கள் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. ஐரோப்பிய மொழிகளைச் சீர்தூக்கிப் பார்த்தவர்கள் இத்தாலிய மொழி ஆற்றொழுக்குப்போன்ற இனிமை வாய்ந்ததென்றும், ஸ்பானிய மொழி பெருமிதத்தோடு கூடிய செய்யுண்மை நலம் வாய்ந்ததென்றும், ஜெர்மன் மொழி அளப்பற்ற செறிவு மேம்பாடுடையதென்றும், பிரெஞ்சு மொழி சதுரப்பாடும், பேசும் எளிமையும் வாய்ந்ததென்றுங் கூறினாலும், ஆங்கிலமே ஒப்பற்ற வலிவும், உயிராற்றலும் உள்ளதென விதந்தெடுத்துக் கூறுவதோடு, அம்மொழி தேர்ந்த சொற்பொழிவாளனல்லாத ஒரு பேச்சாளன் பேசினாலும் கேட்பாரைப் பிணிக்கத் தக்க ஒரு கவர்ச்சி யுடையதாய் இருக்கின்றதென்றுங் கூறுவர். எனவே, பல துறைகளிலும் மலிந்து காணப்படும் எண்ணற்ற நூல்களை நம் சிறுவர்களும் சிறுமிகளும் படித்துணர்வதற்கு ஆங்கிலமே இன்னும் சிலஆண்டுகள் காறுமாவது எற்ற கருவியாக இருக்குமென்பதற் கையமில்லை. உலகத்தில் இற்றை நாள் வரையப்படுங் கடிதங்களில் முக்காற்பங்கு ஆங்கிலத்திலேயே எழுதப்படுகின்றன. உலகத்தில் அச்சிடப்பெறும் செய்தித் தாள்களிற் பாதிக்கு மேற்பட்டன ஆங்கில மொழியிலேயே அச்சிடப்படுகின்றன. உலகத்திலுள்ள ஒலி பரப்பு நிலையங்களில் ஐந்தில் மூன்றுபங்கு வீதம் ஆங்கில மொழியே வழங்கப்படுகின்றது. இதுகாறும் எக்காலத்து மில்லாதபடி இக்காலை இந்திய நாடானது பெரியதொரு அரசியற்றுறை வளர்ச்சியிலும், வாணிபத்துறைவளர்ச்சியிலும் ஈடுபட விருக்கின்றது. இந்த வளர்ச்சிகளில் ஈடுபட்டுழைப்பதிற் பங்குகொள்வது உங்களுக்குப் பெருமையளிப்பதாயிருக்கலாம். அவ்வாறு உழைக்குங் காலத்தில் அவ்வுழைப்பின் பெருமைக் கேற்றவாறு உங்கள் கல்விப் பயிற்சியின் வெற்றியும் உடன்கணித்தறியப்படும். நம் நாட்டு முன்னேற்றம் நம் கல்விவளர்ச்சிமுறையையே பொறுத்ததாகும். வயிறு வளர்ப்பதற்கான வகையில் கல்விபயிற்றப்படுவது பயன் தருவதாக விருக்கும். அதற்கிருக்கும் மதிப்பு இகழ்ந்தொதுக்கப்படுவதொன்றாகாது. நகரவாழ்க்கை யமைப்பைச் சீர்ப்படுத்துவதும் கல்விப்பயிற்சிமுறையேயாகும். கல்வி யளவிற்கேற்பவே நம் மக்களும் விளங்குவர். நம்நாடும் நம்மக்களின்கல்வி யளவிற்கேற்பவே சிறந்து விளங்கும். ஆகவே, நம் நாடு எத்தகைய கல்விமுறையைப் பின்பற்றி வளர்க்கிறதோ அதைப் பொறுத்ததே அதன் முன்னேற்றம் என்பது உணர்தற்பாற்று.''

---

இது செத்னைப் பெரியார் சென்ற நவம்பர்த் திங்கள் 20-ம் நாள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலாற்றிய பல்கலைக்கழக ஆண்டுவிழா உரையில் ஓர் பகுதியின் மொழிபெயர்ப்பு. (காழி. சிவ. க.)




## குறுந்தொகை மொழிபெயர்ப்பு

[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]
(District Educational Officer, South Arcot.)

(முன் கச-ஆம் சிலம்பு, சஙஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கரு. பாலை

பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

—ஔவையார்

O! friend, how true is the love of the maid with plenty of bangles in her forearm, unto that young man who wears the anklet of heroism and bears the spear of victory shaped as the tender leaf of the *Asoka*, true as the good words of the Kosar of Nallur who to the beat of the drum and the blow of the conch, appeared at the assembly under the shade of the old-time banyan! (15)

—Auvvayar

கசு. பாலை

உள்ளார் கொல்லோ தோழி கானவர்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ

O! friend, will not he, who is wandering in the forest of beautiful-bladed EUPHORBIA, think of me

when he hears the red-legged rock-lizard call for his mate, with a sound like to that of blacksmiths, when they turn with their nails the arrow that is being shaped on the anvil? (16)

**—Palai-Padia-Perunkadung-Ko**

௧௭. குறிஞ்சி

*மாவென மடலு மூர்ப பூவெனக்*
*குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப*
*மறுகி னார்க்கவும் படுப*
*பிறிது மாகுப காமங்காழ் கொளினே.*

—பேரெயின் முறுவலார்

He who is obsessed by love, will ride a palm-frond horse, will wear the budded *madder* blossom, shout out his grievance in the street, and might do even worse. (17)

**—Per-Eyin-Muruvalar**

௧௮. குறிஞ்சி

*வேரல் வேலி வேர்க்கோட் பலவின்*
*சார னாட செவ்வியை யாகுமதி*
*யாரஃ தறிந்திசி னோரே சாரற்*
*சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவள்*
*உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.*

—கபிலர்

O! Lord of the bamboo-fenced mountain slopes, where at the roots the jack fruits grow, rectify your conduct by making public what you keep so secret. The evil of such secrecy, who can estimate adequately? Like unto a heavy fruit hanging from a slender branch, her slender life bears a heavy burden of love. (18)

**—Kapilar**

௧௯. மருதம்

*எவ்வி யிழந்த வறுமையர் பாணர்*
*பூவில் வறுந்தலை போலப் புல்லென்*
*றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்*
*தெல்லுறு மௌவ னாறும்*
*பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.*

—பரணர்

O! heart, be not poor and dejected like the poor poets, who have lost their patron Evvie, and lack the flower of gold to adorn their head, but be of good cheer, like the household *Mullai* whose teeth-like buds open with fragrance. Will not some dark-haired damsel look graciously on us? (19)

**—Paranar**

உ0. பாலை

*அருளு மன்பு நீக்கித் துணை துறந்து*
*பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்*
*உரவோ ருரவோ ராக*
*மடவ மாக மடந்தை நாமே.*

**—கோப்பெருஞ் சோழன்**

If those that in search of fortune give up grace and love and friendship, be considered wise, let them be wise; we are content to be foolish. (20)

**—Koperum-Cholan**

உக. முல்லை

*வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு*
*பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்*
*கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்*
*கானங் காரெனக் கூறினும்*
*யானோ தேறேனவர் பொய்வழங் கலரே.*

**—ஓதலாந்தையார்**

Though the forests hung with fresh blossoms of *konrai*, seem like women wearing among their ornaments of gold, bunches of *mullai* haunted by hordes of bees, I cannot yet believe that the season of rain has come, for I cannot help believing my Lord (who said he would return at such a time). (21)

**—Odhal-Anthayar**

உஉ. பாலை

*நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய*
*யாரோ பிரிகிற் பவரே சாரற்*
*சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து*

*வேனி லஞ்சினை கமழுந்*
*தேஎ மொண்ணுத னின்னொடுஞ் செலவே.*

—சேரமானெந்தை

The citizens of this delightful place, where the mountain slope has taken the white cedar tree with its right-whirled blossom-laden boughs as an ornament, think of going with you, feeling for your separation from her, whose eyes are ever drcpping tears. (22)

**—Seraman-Enthai**

௨௩. குறிஞ்சி

*அகவன் மகளே யகவன் மகளே*
*மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்*
*அகவன் மகளே பாடுக பாட்டே*
*இன்னும் பாடுக பாட்டே யவர்*
*நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.*

—ஔவையார்

O! singer with long grey hairs, like rows of cowries strung together, sing in praise of our King's lovely long range of mountains, sing of it again and yet again! (23)

**—Auvvayar**

௨௪. பாலை

*கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்*
*என்னை யின்றியுங் கழிவது கொல்லோ*
*ஆற்றிய லெழுந்த வெண்கோட் டதவத்*
*தெழுகளிறு மிதித்த வொருபழம் போலக்*
*குழையகக் கோடியோர் நாவே*
*காத லரகலக் கல்லென் றவ்வே.*

—பரணர்

Could my lord be without me, seeing that spring has called forth the lovely blossoms on the black babul tree? He left me helpless as the ripe fruit from the tall fig tree on a river bank which an elephart rising from its waters has trampled mercilessly. Shall he not feel sorry for it and come to me now? (24)

**—Paranar**

# அறிவியற் பகுதி - Science

## வீரரும் வீரரைப் போற்றலும்

[திருமதி குணஜனார்த்தனம் எம். ஏ., எல். டி.]

(முன் ௧௯-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாம் அரிச்சந்திரனை இன்றும் போற்றிப் புகழக் காரணமென்னை?

அவன் உண்மையை நிலைநிறுத்தும்பொருட்டுப் பன்னற்கரிய இன்னலுக் குட்பட்டானன்றோ? தன் நாடு இழந்தான்; தலைவியை யிழந்தான்; பின்னர், தன் மகனையு மிழந்தான். அந்நிலைமையினும் தன் வாய்மை தவறினான்கொல்? அப்பெற்றி வாய்ந்த வாய்மையோரும், மன வலியுடையோரும் நம்முள்ளும் எத்துணைபேர் இருக்கிறோம்!

ஆண்களேயன்றிப் பெண்களும் வீரராகத் திகழ்ந்தார்கள் என்று நமது பண்டைய நூல்கள் கூறுகின்றன.

முதல்நாள் போரில் தன் தந்தையையும் தலைவனையும் இழந்த ஓர் முதியோள், இரண்டாம் நாள் மாற்றார் செருப்பறை கேட்டுத் தனது ஒரே பிள்ளையைப் போர்க்கோலஞ் செய்து, “செருமுக நோக்கிச் செல்க” எனக்கூறி அனுப்பினள் என்றால் அவள்தம் வீரம் இருந்தவாறு என்னே! சிறந்த வீரர் தம் நாட்டின் பொருட்டுத் தமது உயிரையுங் கொடுப்பர்; அஃதே ஓர் ஆண்மகனுக்குற்றதொரு சிறந்த வொழுக்கம் என்ற உண்மையை உணர்ந்தன்றோ தனது ஒரே ஒரு அருமந்த மகனை அமர்க்களம் போக்கினள்?

தாமே வாளேந்திப் போர்முனை சென்று மிக்க திறமையுடன் போர்புரிந்த வீரப்பெண்மணிகள் பலரை அறிந்திருக்கலாம்.

இஃதன்றியும், சீதையும் சாவித்திரியும் உண்மை நெறி தவறாது நின்று உலையாப் புகழ்நிறுத்தியதூஉம் அறியாததன்று. தன்னை வஞ்சகமாகக் கவர்ந்துசென்ற அரக்கர் தலைவனிடம் கூறும் சீதையின் வீரஞ்செறிந்த மாற்றம் வியப்புறுத்துவதாகும். அவளை யடையும்பொருட்டுச் செய்த அரக்கர்கோனின் சூழ்ச்சிகளெல்லாம் வீணாயின.

‘நின் தந்தையைக் கொன்று விடுவேன்’, என்று அச்சுறுத்தினால் தன்வழி வருவாளெனக் கருதிய இராவணன், ஓர்

அரக்கனை சனகனுகச்செய்து சானகி முன்னிலையில் அவனை அலங்கோலமாக இழுத்து வரும்படி செய்தான். அவனைத் தன் தந்தையென்றே கருதிய சீதைப் பெருமாட்டி நெஞ்சம் நைந்துருகி, 'தந்தையே பெண்பெற்ருய், அதனல் நீ இத் துயரம் பெற்ருய்; யான் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற் குங் கேடுவிளைவித்துவிட்டேனே,' என்று புலம்பினுள்.

அதுபோழ்து இராவணன், 'நீ என் விருப்பத்திற் கிசைந்தால் நின் தந்தையை விடுவித்து அவனுக்கு யான் அடிமையாகுவேன்,' என்றனன். பொய்யான சனகனும்,

"பாவியான் பயந்த நங்கை நின்பொருட்டாகப் பட்டேன்
ஆவிபோயழிய னன்றே யமரர்க்கு மரசனுவான்
தேவியா யிருத்தநீதே சிறையிடைத் தேம்புகின்ருய்
என்னையென் குலத்திேேனாடு மின்னுயிர்த் தாங்கியீண்டு
நன்னெடும் செல்வந் துய்ப்பேனுக்கினை நல்கிநாளும்
உன்னை வெஞ்சிறையினீக்கி யின்பத்து ளுய்ப்பா யென்னுப்
பொன்னடி மருங்கு வீழ்ந்தா னுருமுகப் பொருமுகின்ருன்"

அதனைச் செவிமடுத்த சீதை அடங்கா வெகுளிகொண்டாள்.

"அவ்வுரை கேட்ட நங்கை செவிகளை யமையப் பொத்தி
வெவ்வுயிர்த் தாவி தள்ளி வீங்கினள் வெதுளி பொங்கி
இவ்வுரை யெந்தை கூரு னின்னுயிர் வாழ்க்கைபேணிச்
செவ்வுரை யன்றி தென்னுச் சீறின ளுளையச் செப்பும்"

என்று கம்பர் கூறுமாறு சீதையின் நிலைமை உணர்க. அங்ஙனம் சீறிய சீதை மாயசனகனை நோக்கி, 'அடாத மொழிகள் கூறிஞய். நீயும் உன் சுற்றமும் மற்றும் இவ் வுலகிலுள்ளோர் அனைவரும் இறப்பதாயினும் யான் என் னெறியினின்றும் தவறமாட்டேன்' என்று வீரவுரை பகர்ந்தாள்.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்னும் ஓர் அம்மையார் நமக்கு வெகு நெருங்கிய காலத் திருந்தவர். அவர்தம் வீரம் விளங்கியமை சில்லாண்டுகட்குமுன் நடந்த மாபோரில் (Great War) தான். அவ்வம்மையார் அப்போர்க்களத்தில் அஞ்சா நெஞ்சினராய், புண்பட்டவர்க்கும், நோய்கொண்டவர்க்கும் மருத்துவத் தொண்டுபுரிந்து வந்தார். எந்நேரத்திலேனும் ஆகாயத்தினின்று வெடிகுண்டு விழக்கூடிய அவ் விடத்திலே மக்கள்பாற்கொண்ட பேரன்பினுல் அவர்கள் இன்னலுற்ற காலத்துப் பொருமல் ஆண்டிருந்து அவ்வின்னல் களைக் களைந்து வந்தாரென்ருல் அவர் வீரம் பொருந்தியவ ரன்ருே?

இவ்வாறெல்லாம் ஆண்மக்களிலும் பெண்மக்களிலும் வீரஞ்செறிந்த நமது நாடு இப்போது எந்நிலைமையிலிருக்கிறது; தமே வீரராகயிருக்க வியலாமற்போனாலும் வீரராயிருப்போரையேனும் போற்றுதல் கூடாதோ?

இயேசுவுக்கு மாணாக்கர் பலர் உண்டு. அம்மாணாக்கர்கள் அவர்மேல் மிக்க அன்பு பூண்டொழுகினார்கள். இவ்வாறிருக்கு நாளில் இயேசுநாதர் காவலாளரால் கைப்பற்றப் பெறுவதற்குச் சற்றுமுன், இயேசுபெருமான் தம் மாணாக்கரை நோக்கி, 'என்னிறுதிக்காலம் கிட்டிற்று; நீங்கள் யான் கூறியவற்றை மறக்காது அதன்படி ஒழுகுங்கள். நீவிர் யாவரும் அன்பே உருவாகத் திகழவேண்டும்,' என்று அறிவு கொளுத்தினார்.

அச்சமயம் பீட்டர் (Peter) என்ற மாணாக்கன், 'உமக்காக என்னுயிரையும் கொடுக்கவல்லேன்,' என உறுதி கூறினான். அப்படி உறுதிகூறிய அவன் சற்று நேரத்திற்குப் பின் செய்த தென்னையெனக் கவனியுங்கள்.

ஒரு நள்ளிரவில் இயேசுநாதரைக் கொடியவர் கொண்டு போய் காவலிலிட, என்ன நடக்கிறதென்று பார்க்க பீட்டரும் பின்சென்றான். ஏசுநாதரைச் சிறையிட்ட முரடர்கள் அவரை இழிப்பதும் பழிப்பதுமா யிருந்தனர். வெளியே உட்கார்ந்திருந்த பீட்டரைக் கண்ட ஒரு வேலையாள், 'இவனும் அவனைச் சேர்ந்தவன்,' எனலும் இயேசுபெருமானுக்காகத் தன் இன்னுயிரையுங் கொடுப்பதாக உறுதிகூறிய பீட்டர் தன்னுயிருக்கஞ்சி இயேசுநாதரைத் தனக்குத் தெரியவே தெரியாது என்று ஆணையுமிட்டான்.

என்னே அவன்றன் இழிவான தன்மை! தன்னுயிருக்கஞ்சி, உலகமே உய்யப்பிறந்த உத்தமரை மறுத்தான். இதுவோ ஆண்மை! இஃது இழிவினும் இழிவான செயலன்றோ? நம்மவருள்ளும் பெரும்பாலோர் இந் நீர்மையராகவே இருக்கின்றார்கள். இதனைக் குறித்து யாம் பெரிதும் வருந்தவேண்டும். ஒருவர் பேரறிஞராயும் பெரு வீரராயும் விளங்கக்கண்டும் பிறர் அவரைப் போற்றாத காரணத்தினால் நாமும் அவரைப் பாராட்டுகின்றோமில்லை. இதைவிட இழிவானது வேறொன்றுமில்லை.

நம்மனத்திற்பட்ட உண்மையை வெளிப்படையாகக் கூறுவோமாயின் நாமும் வீரத்தன்மை சிறிது வாய்ந்தவராவோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வீரரைப் போற்றுதல் வேண்டும்; போற்றுதல் என்றால் அவரைத் தெய்வமாகத் தொழல்வேண்டுமென்பதல்ல. அவர்தம் அரும்பெருங்குணங்களை மனத்திற்கொண்டு அவரைப் போல் நாமும் நம்மவரும் நடக்க முயல்வதே வீரரை உண்மையாகப் போற்றுதலாகும். அதை விடுத்து அவர்கள் வீரர் தாமென ஒத்துப் பாட்டுப் பாடுவது போற்றுதலாகாது.

நம் பிள்ளைகளுக்கும் அடிக்கடி வீரர் சரிதங்களைக் கூறி அவர்தம் அரும்பெருங் குணங்களை யெடுத்துக்காட்டல் வேண்டும். சிறுவயதிலிருந்தே வீரச் செயல்களைப் பற்றியும் வீரரைப்பற்றியுங் கேட்டுவந்த ஒரு மகன் வீர உணர்ச்சிப் பெறுகிறான். சிறு பருவத்திலிருந்தே வீரம் பிள்ளைகளின் மனதில் பதியவேண்டும். வெறுங்கதை சொல்வதிற் பயனில்லை. அவரவர் எவ்வெவ்வகையில் வீரராக விளங்கினாரென்று நாம் எடுத்துக்காட்டுவோமாயின் நம்பிள்ளைகளும் அச்சொற்களிலே ஊறி அத்தகைத்தாய உணர்ச்சி அடைவது திண்ணம். இவ் வீரம் என்று நம்மனோர் மனத்தில் வேரூன்றிப் பதிகின்றதோ அன்றே நமது நாடும் முன்னேறக்கூடும்.

> ''பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்''

என்ற குறளையும்,

> 'இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
> நடுக்கற்ற காட்சி யவர்'

என்ற குறளையும் நாமனைவரும் நன்குணர்ந்து அதன் வழி நடப்போமாயின் நாம் மேம்பட்ட நிலைமையை எய்துவது எளிதன்றோ?

# தமிழர்க்கு இந்தி வேண்டுமா?

[புதுவை, சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள்]

*தமிழுக்கு வேண்டிய அருட்செல்வம் உள்ளது. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ், திருக்குறள், பெரிய புராணம் போன்ற அருள்வாக்குகள் மனிதவாழ்விற்குக் கடவுளொளி காட்டுவன. அவை தமிழருக்குப் போதும். அருங்கலைச் செல்வத்திற்கு மேனாட்டைத்தான் எதிர்பார்க்கும் நிலைமையில் இந்தியா உள்ளது. தாய்நாட்டின் அருட்செல்வமும் மேனாட்டின் பொருட்செல்வமும் சேர்ந்தே இனி நம்மை ஆளாக்கவேண்டும். இந்த இரண்டிற்கும் இந்தி எவ்வாறு பயன்படும் என்பதை அறிஞர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தியினின்று தமிழர் கற்றுப் பயனடையக்கூடியது ஒன்று உண்டு. அதாவது அம்மொழி எவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் முன்னேறி வருகிறதோ அவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் தமிழை முன்னேற்ற ஒவ்வொரு தமிழனும் விரதம்பூண்டு முயற்சி செய்வது.* கோரக்பூர் கீதா அச்சுக்கூடம் செய்யும் வேலையைத் தமிழர் செய்தால், இந்தியாவிற்குத் தமிழையே தாய்மொழியாக்கலாம் என்பது கனவாகாது; உறுதியாக நடக்கும். தமிழுக்கு இயல்பாக அவ்வளவு பெருமையுள்ளது. அப்பெருமை தென் குமரிக்கும் வட வேங்கடத்திற்கும் இடையே சிறைப்பட்டுள்ளது. இனித்தான் விரிந்து உலகளாவவேண்டும். ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக **30** எழுத்துக்களில் முற்ற முடிந்த ஒரு அரிய பெரிய தொன்மொழி தமிழே. *அஃது இப்போது காலவெள்ளத்தில் வடக்கு, மேற்கிலிருந்து மோதும் அலைகளால் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தமிழனின் கையும் தமிழ் முன்னேற்றத்திற்குக் கைதந்து, இப்பெரிய அரிய அருள்மொழியை அதற்குரிய அரியணையில் ஏற்றி இலக்கவேண்டிய காலம் இது. இன்னும் ஐந்தாண்டுகளில் வீடு தோறும் தமிழ்மணம் கமழும்படி செய்யவேண்டும். மேனாட்டிற்குப் பெருமை தரும் கலைகளெல்லாம் நம் தமிழர் நன்கு பயின்று அறிந்து பயன்பெறும்படி செய்யவேண்டும். இல்லேல் மேற்சொன்ன அலைகள் மீண்டும் விழுங்கும்! தமிழர் விழித்தெழுக!*

இந்தியைவிட ஆங்கிலமே நமக்கு இப்போது இன்றியமையாதது. ஆங்கிலத்தினால்தான் ஜப்பான் முன்னேறிப் பொருட்செல்வம் பொலிந்து விளங்குகிறது. வெறும் மொழிப்பயிற்சிகளிலேயே ஆயுள் வீணாகக்கூடாது. ஒவ்வொருவனும் தனது தாய்மொழியை நன்கு கற்கவேண்டும். *உலகுடன் பழகுவதற்கும் தொழில் நடத்துவதற்கும் பெரும்பான்மையோர் உலகெங்கும் நன்கு அறிந்த ஒரு மொழியையும் கற்றறியவேண்டும். அத்தகைய மொழி இப்போது ஆங்கிலமே என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே.* மக்களுக்கு வேண்டுவன இரண்டு அருள், பொருள். அருட்செல்வம் தமிழில் மலிந்துகிடக்கிறது. உலகிற்கெல்லாம் வழங்கலாம். பொருட்செல்வத்திற்கு ஆங்கிலத்தின் அறிவுந் துணையும் வேண்டும். *ஆங்கிலத்தில்*

நமக்கெய்தும் பயனைத் தமிழுக்கே உரிமையாக்கவேண்டும். அத்தகைய முயற்சியால்தான் நாம் தலை நிமிரமுடியும். இந்தி காற்றினும் கடிய வேகத்துடன் முன்னேறி வருகிறது. கலைகளெல்லாம் இந்தியில் ஆக்கப்பட்டு வருகின்றன. புதிய புதிய நாவலர்களைக்கொண்டு புதுப்புது நூல்களை யாத்து அம்மொழியை நாட்டின் முதன்மொழியாக்க முயல்கின்றனர். அம்முயற்சி தமிழுக்குத் தமிழ்நாட்டில் நடைபெறவேண்டும். சைவ சித்தாந்தக் கழகம் ஒன்றுதான் இப்போது அத்தகைய பெருமுயற்சியில் தலையிட்டுச் சென்ற பல ஆண்டுகளாக மிகவும் அரிய பெரிய நூல்களை வெளியிட்டு சொற்ப விலைக்குக் கொடுத்துதவி வருகிறது. இத்தகைய முயற்சிகளைத் தமிழர் ஒருமித்து ஆதரிக்கவேண்டும். தமிழ் இப்போதிருக்கும் நிலைமையில் நமக்கு வேறு மொழிகளில் ஈடுபட நேரமில்லை. பிற மொழிகளை நாம் வெறுக்கவில்லை. அதனிடத்தில் அததது உயர்வே. அவரவர்க்கு அவரவர் தாய்மொழி உயிர். தமிழின் உயிரைக் காப்பாற்றும் பணி நமக்கு இப்போது வந்துள்ளது. பிற மொழிகளின் முன்னேற்றத்திற்குத் தக்கவாறு தமிழ் முன்னேறியாகவேண்டும். அதற்கு மாருக, நம் பள்ளிச்சிருர், தமிழைப் புறக்கணித்து வேருெரு மொழிக்கு முதன்மை தரும்படியான எத்தகைய முயற்சியும் தமிழுக்கு ஆக்கந் தராது. தமிழ், இந்தி, ஆரியம், ஆங்கிலம், தெலுங்கு முதலியன அத்தனையும் கற்ருல் நல்லதுதான். இன்னும் பல மொழிகளையும் கற்கலாம். ஆனல் நேரம்? நமக்கு வேண்டுவது எது? மொழிப் பயிற்சியின் நோக்கமென்ன? மனிதர் ஒருவரோடொருவர் கலந்து உறவாடிப் பயன் பெறுவதே. அதற்கு முதன்மையாகத் தாய்மொழி வேண்டும். அது நமது தாயகத்திற்கு ஒருமைப்பாட்டுணர்ச்சியைத் தரும். இரண்டாவது, உலகறிந்த ஒரு மொழி வேண்டும். தற்போது அத்தகைய மொழி ஆங்கிலம் பிரஞ்சு இரண்டும். எந்த நாட்டிற்குப் போனலும் இந்த இருமொழிகளுக்கும் செல்வாக்கு உண்டு. இந்த இரண்டிலும் மேம்பட்டது ஆங்கிலமே. அதனல்தான் ராஜாராம் மோகன்ராய் போன்ற பெரியார் பலர் நம் நாட்டிற்கு ஆங்கிலத்தின் முதன்மையை வற்புறுத்தினர். இன்று உலகிலுள்ள இலக்கியச் செல்வமெல்லாம், கலையறிவெல்லாம் ஒருங்கே ஆங்கிலத்தில் காணலாம்: ஒருசிறு தீவினர் பேசும் அம்மொழிக்கு வந்த பெருமைதானென்னே! அதன் பெருமை அசைக்க முடியாதபடி மென்மேலும் ஓங்கி வளருகிறது. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததனலன்றே தாகூரின் கீதாஞ்ஜலி உலகப்பரிசுபெற்றது! விவேகானந்தர் சிகாகோ மேடையில் ஆங்கிலத்தில் பேசியதாலன்றே இன்று நமது நாட்டு வேதாந்தம் கடல் கடந்தொலிக்கிறது! அதுபோலவே சித்தாந்தமும் கடல் கடந்தொலிக்கச் செய்யவேண்டும். தமிழ் உலகறிய விளங்கவேண்டுமாயின் ஆங்கிலத்துணை வேண்டும். மொத்தமாக எந்த இந்திய மொழிக்கும் தற்போது ஆங்கிலத்தின் துணைவேண்டும். வங்கமொழி ஆங்கிலத்தின் கூட்டுறவால் மிகவும் முன்னேறியுள்ளது. தமிழின் அருட்செல்வத்தை ஆங்கிலத்தில் ஆக்கி உலகெங்கும் பரப்பவேண்டும். ஆங்கிலத்திலுள்ள பொருட்செல்வத்தைத் தமிழாக்கவேண்டும். இந்த இரண்டுதான் தமிழருக்குப் பெருமைதரும்.

இந்தப் பணி நிறைவேறிய பிறகு தமிழர் எத்தனை மொழிகளைவேண்டு மானாலும் கற்கட்டும்.

இந்தியை நாம் வெறுக்கவில்லை. கற்பவர் கற்கட்டும், கட்டாயப் படுத்தவேண்டாம். மாணவருக்குத் தமிழறிவு பாழ்படும்படியான போட்டி மொழிகளை முதன்மையாக்க வேண்டாம். இந்தி கற்றவரும் என்ன செய்யவேண்டும்? அம்மொழியிலுள்ள நயங்களைத் தமிழிற்கு உரிமையாக்கவேண்டும். அப்படித்தான் நமக்கு அருகேயுள்ள வடுகு முன்னேறி வருகிறது. எம்மொழியில் புதுமை காணினும் அதை உடனே தம்மதாக்கி வருகின்றனர் வடுகர். தற்போது தெலுங்குப் பேரகராதி ஒன்று தயாரிக்கின்றனர். அதில் வெறும் பேசும் மொழி களேயன்றி உலகிலுள்ள பெரியார் வரலாறுகள், புதுமைகள், நாட்டு வரலாறுகளைப் படங்களுடன் அச்சிட்டு வருகின்றனர். தக்காரை அதற்குக் கட்டுரை எழுதச்சொல்லி ஆதரிக்கின்றனர். உதாரணமாக, உயிரெழுத்துத் தொடக்கத்தில் அரவிந்தர் வரலாற்றை இங்குக் கேட்டு ஐந்து பக்கம் படத்துடன் வெளியிட்டுள்ளனர். தமிழர் சுற்றிலும் உலகைப் பார்க்கவேண்டும்; பெருமுயற்சி செய்யவேண்டும்; அதற்குத் தக்காரை ஆதரிக்கவேண்டும்.

எம்மொழி பயின்றாலும் அதன் நயத்தைத் தமிழாக்கவேண்டும். அப்துல் பாகர் என்ற தீர்க்கதரிசி, 'ஒவ்வொருவரும் தாய் மொழியும் உலகறிந்த ஒரு பொது மொழியும் கற்றால் போதும். பல மொழிப் பயிற்சியில் நேரம் போக்கவேண்டாம்' என்கிறார். மேனாட்டார் தமது தாய்மொழியுடன் எஸ்பிரான்டோ என்னும் உலகப் பொதுமொழி யையும் கற்கின்றனர். எஸ் பிராண்டோ மிகமிக எளிது. இலக் கணம் சுருக்கம். பத்தே விதிகள். ரஷ்ஷியா, பிரான்ஸ், அமெ ரிக்கா, இங்கிலாந்து எங்கிலும் இப்போது எஸ்பிராண்டோ கற்கின் றனர். பல மொழிகளின் தேவையின்றி இருமொழிகளிலேயே உலகை யாளுகின்றனர். தாய்மொழி, பொதுமொழி இரண்டு கற் றால் போதும் என்பது அறிஞர் கொள்கை. வடநாட்டிலேயே ஆரியம் மிகைபடக்கலந்த இந்திக்கும், அரபி, பார்சி மிகுந்த உருதுக்கும்போட்டி யுள்ளது. ஆதலால், விருப்பமும் நேரமும் இருந்து கற்பவர்கற்கட்டும். அஃது அவரவர் மனப்பான்மை. ஒருவர் லத்தீன் கற்பேனென்று முனைந்தால் அவர்களைப் பிறர் தடுத்தல் பான்மையன்று. கற்பவர் கற் கட்டும். கட்டாயமாகக் கற்றே தீரவேண்டும்; இல்லேல் வாழ முடி யாது என்று தடபுடல் செய்யவேண்டாம். பள்ளிச்சிறார்க்குத் தமிழும் ஆங்கிலமும் மென்மேலும் வளரும் நன்முயற்சிகளை இடையறாது செய்வோம். இதுதான் எமது விருப்பம். உள்ள மட்டும், தமிழ்க்கே உயிர்க்கிறேன், பிற்காலத்திலாயினும் தமிழர் அதன் பயனைப் பெறுக.

---

குறிப்பு: தமிழ்மக்கள் பொன்னேபோல் போற்றத் தகுந்த கட்டுரையாகும்.
—பதிப்பாளர்.

## "தினமணி" மதிப்புரைக்கு எதிர்ப்புரை

[ஈழத்துச் சிவானந்த அடிகள் எழுதியது]

தாது—ஐப்பசி 13-ம் நாளி (28-10-'36)ல் வெளிவந்த தினமணிப் பத்திரிகையில் ஒருவர் **திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால்** வெளியிடப்படும் '**செந்தமிழ்ச் செல்வி**' என்னும் பத்திரிகைமீது சீற்றங்கொண்டு அதைப்பற்றிச் சில **அபிப்பிராயங்கள்** கூறியதின் வாயிலாகத் தமக்கிருக்கும் ஆராய்ச்சி யின்மையையும் பொறுமை யின்மையையும் குறிப்பால் உணர்த்துகிறார். இதைத் தினமணிப் பத்திரிகையை நடாத்தும் அதன் சொந்தக்காரர் நன்கு சிந்திக்க விரும்புகின்றேன்.

அவர் செந்தமிழ்ச் செல்வியைப்பற்றித் தமது அபிப்பிராயங்களைக் கூறியதில், செந்தமிழ்ச் செல்வி இலக்கியத்தை வளர்ப்பதற்காக அக்ஞாதவாசம் புரிந்துகொண்டு இருக்கிறதென்றும், அதில் காணப்படுங் கட்டுரைகளில் முழுவதும் குறுகிய நோக்கமும் பிற்போக்கான மனப்பான்மையும் நிறைந்திருக்கின்றன வென்றும், அதன்கண் வெளியிடப்பட்ட "தமிழும் இந்தியும்" என்னுங் கட்டுரையில் காணப்படுங் கேள்விகளெல்லாம் அசட்டுக் கேள்விகளென்றும், அவற்றிற்கு விடையளிக்கக்கூடிய பொறுமையான சிறந்த குணம் தமக்கு இயல்பாக இல்லையென்றுங்கூறுகிறார். புத்தியுள்ளவருக்கல்லவா பொறுமை உண்டாகும். ஏனையோர் பொறுமையற்றுச் சிறுமையைத் தாமே தேடிக்கொண்டவர். இத்தகையினர்க்குப் பொறுமை ஏற்படவேண்டுமானால், செந்தமிழ்ச் செல்விபோன்ற சிறந்த கருத்துக்கள் அடங்கிய பத்திரிகைகளை இடைவிடாது பயிலல்வேண்டும்.

செந்தமிழ்ச் செல்வி என்னுஞ் சிறந்த பத்திரிகையில், மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத் துணைக்கருவியாகவுள்ள இலக்கியத்தை வளர்த்து, மக்கள் மனம் நிலையான அமைதியில் நுழையும் வண்ணம் எழுதப்படுங் கட்டுரைகளின் திட்ப நுட்பங்களை ஆராய்ந்தறியவேண்டுமானால், பொறுமையோடு கூடிய அறிவு வேண்டும். அஃதில்லார்க்கு அவை கசப்பாகவே தோன்றும். உண்மையாகவே உலக முன்னேற்றத்தைக் கருதிப் பாடுபடுவோர் அதற்கு அடிப்படையானவும், இன்றியமையாது வேண்டப்படுவதுமான இலக்கியப் பயிற்சியை இகழ்ந்து தள்ளவோ அல்லது அதனையும் அதனைப் பயில்வோரையும் கண்டு வெகுண்டு சீற்றங்கொள்ளவோ முன்வராார். உலகியலில் பெரும் நன்மையை விளைக்கக்கூடியது இலக்கியம் ஒன்றே என்பதனை நன்குணர்ந்தே மேல்நாட்டுப் பேரறிஞர்களாகிய **மில்டன், மெக்காலே, மார்லி**, பேக்கன் முதலியோர் அவ்விலக்கியத்திற் சிறந்த பயிற்சி உடையவர்களாய், அரசாங்கத்தில் பெரும் பதவிகளை வகித்து நாட்டிற்கு நலம் பல செய்துள்ளார்கள். அன்றியும், நந் தமிழ்நாட்டை அரசுபுரிந்த **சேர சோழ பாண்டியருட்** பலரும், அவர்களிடம் அமைச்சராய் இருந்து அலுவல் பார்த்த **தாயுமானவர், சேக்கிழார், மாணிக்கவாசகர்** முதலியோரெல்லாம் சிறந்த இலக்கியப் பயிற்சி உடையாராய் இருந்தமையினாலன்றோ தமிழ்நாடு வான்புகழ்கொண்டு சிறந்து

விளங்கியது. அத்தகைய இலக்கியப் பயிற்சியுள்ள அறிஞர்கள் இக்காலத்தில் இல்லாது போனதினுல் அல்லவா நம் நாடு அயல்நாட்டவரால் ஆளப்பட்டு வருகின்றது.

மக்கள் அறியாமை இருளினின்றும் விலகவும், அறிவென்னும் ஒளியைப் பெறவும், அவ்வறிவின் வாயிலாக நாட்டின் குறைகளை உணரவும் உணர்ந்து அதற்கேற்ற துறைகளில் இறங்கிப் பாடுபடவும் கருவியாகவுள்ள பல அறிவுக் கட்டுரைகளை, மக்களின் வாழ்க்கைக்கு ஊன்றுகோலாகவுள்ள இலக்கிய உறவுகொண்டு எழுதி உதவும் செந்தமிழ்ச் செல்விபோன்ற உயர்வான பத்திரிகைகளைக் குறை கூறித் திரிபவர்தாமா நாட்டிற்கு நலந்தேட உழைக்க முடியும்! "நூற்றைக் கெடுத்தது குறுணி" என்பதுபோல, இவர் போன்றவர்கள் அல்லவா அறிவுடையோரால் தழுவப்படாது தள்ளப்படுகின்றனர்.

பத்திரிகைகள் எழுதி வெளியிடல் பல்லாற்ருனும் மக்கள் முன்னேற்றம் அடையும் பொருட்டேயன்றி, வேறன்று. மற்று, அவை தாம் ஓரிடத்திற்கே ஒரு காலத்திற்கே உரியவாதலின்றி, இவ்வுலகெங்கும் பரவி என்றென்றும் நிலைபெற்று விளங்குவதால், அவற்றை இயற்றி வெளியிடுவோர் அவை எழுதுவதன்கண் எவ்வளவு கவனம் செலுத்துதல் வேண்டுமென்பதனை அவர் தமக்குத்தாமே ஆராய்ந்தறிதல் நலம். ஒன்றன் உண்மையை உணராமலும், உணர விருப்பந்தானும் இல்லாமலும் மனம் போனவாறே எழுதி மக்களின் மனஅமைதியைக் குலைத்தல் அறிவுடையோருக்கு அழகன்று. உண்மையை அறிய வேண்டுவோர் எப்பொழுதும் அவ்வுண்மையையே பார்க்கவேண்டும். அப்படிப் பார்ப்பதுதான் அறிவுடையோர் செயல். அறிவுடையோர்க்கு எப்பொழுதும் எப்பொருளிலும் அவ்வுண்மைதான் தோன்றும். உண்மை அல்லாதது அவர்கள் அறிவுக்குத் தப்பிவிடும். ஆனுல், உண்மையை உணரமுடியாது செந்தமிழ்ச் செல்வியைக் குறைகூறிய அன்பர் போன்றவர்கட்கு முதல்முதல் உண்மை அல்லாததுதான் தோன்றும்போலும்! இவர்போன்ற உண்மை அறியாதவர்களும் உண்மை உணர்ந்தவர்கள்போல வெளியே நடிக்கின்ருர்கள். அந்நடிப்பும் வேறு. உண்மை உணர்ந்தவர்களது ஒழுக்கமும் வேறு. அந்நடிப்பொழுக்கத்திற்கும் உண்மை ஒழுக்கத்திற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. அவ்விரண்டையும் ஒன்றென்று அறிவுடையோர் கொள்ளார். அவ்விரண்டாலும் ஒரே பயன் விளைதலும் இல்லை. வெவ்வேறு பயனே விளையும். ஆதலால் உண்மை உணர்ந்தே அதனைக் கடைப்பிடித்தல் வேண்டும். இதற்காகவேதான் செந்தமிழ்ச் செல்வி போன்ற சிறந்த பத்திரிகைகளில் காணப்படும் இலக்கியச் சுவைததும்பிய இனிய கட்டுரைகளை, அத்தகைய பத்திரிகைகளுக்குக் குறை கூறித் திரிபவர்கள் நன்கு பயின்று பழகவேண்டுமென்று மீண்டும் மீண்டும் இடித்திடித்துக் கூறவேண்டியதாய் இருக்கிறது.

செந்தமிழ்ச் செல்வியில் கட்டுரைகள் எழுதுவோர் எத்தகைய மேம்பட்ட அறிவுடையோர் என்பதை நாடு நன்கறியும். ஈண்டு நான் அவர்களைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. பகலவனை அறியாதவர்கள் இருப்பாராயின் அவர்களை அறியாதவரும் இருப்பர். சைவ சித்தாந்த

**நூற்பதிப்புக் கழகத்தார்** நாட்டின் நலத்தைக் கருதிச் செய்யுந் தொண்டில் ஆயிரத்தில் ஒருபங்குதானும் அவர்களை இகழ்ந்து கூறும் "அறிஞர்கள்" பலர் செய்கிறதாகத் தெரியவில்லை. "தினமணி" ஆசிரியருக்குத்தான் பொறுமையில்லையே! பொறுமையில்லாதவர் புத்திசாலித்தனமான செயல்களை எங்ஙனஞ் செய்யமுடியும்?

இனிச், செந்தமிழ்ச் செல்வியில் வெளியிடப்பட்ட "தமிழும் இந்தியும்" என்னுங் கட்டுரையில் காணப்படுங் கேள்விகளை அசட்டுக் கேள்விகளென்றும், அவற்றிற்கு விடை கூறத்தக்க பொறுமை தமக் கில்லையென்றும் அவ்வாசிரியப் பெருந்தகை கூறுகிறார். அசட்டுக் கேள்விகளுக்கு விடைகூற வேண்டுமாயின், அதற்குரிய அசட்டறிவும் அசட்டுக் குணமும் உடையார்க்கே இயலும். அவ்வாசிரியர் போன்ற சட்டறிவும் சட்டுக்குணமுமுள்ள சட்டுக் கிரியைக்குட் கிடந்து உழலுவோருக்கு எங்ஙனம் அசட்டுக் கேள்விகளுக்கு விடை கூறத்தக்க ஆற்றலும் பொறுமையும் ஏற்படும்? அசட்டுக் கேள்வி என்பது அழிவில்லாத புகழுடம்போடு நின்று விளங்கக் கூடியவர்கள் கேட்குங் கேள்வி. அத்தகையோர் இறந்தும் இருப்பவராவர். அவர் வாய்மொழிகளையும் வையகம்போற்றும். இனிச் சட்டுக் கேள்வி என்பது அழியுந் தன்மையுடைய புலால் உடம்போடுமட்டும் நிற்கக்கூடியவர்கள் கேட்குங்கேள்வி. அவர் இருந்தும் இறந்தவராவர். அவர் வாய் மொழிகளையும் வையகம் தூற்றும். எனவே, "தமிழும் இந்தியும்" என்னுங் கட்டுரையிற் காணப்படுங் கேள்விகளெல்லாம் அசட்டுக் கேள்விகளாய், என்றைக்கும் அழியாதனவாய் நிலைபெற்று விளங்கும் கேள்விகளாம் என்பதை எல்லாரும் உணர்ந்து, இனிமேலாவது அவற்றிற்குத் தக்க விடைகள் கூற முன்வருவார்களா! இவர்களுக்குப் பொறுமை பெரிதும் உண்டாவதாக!

இனித், தினமணிப் பத்திரிகை இச் சிறந்த பொருளை அறியாமல் அக் கேள்விகளை இகழ்ந்து கூறப்பார்த்தார். ஆனால் அவை அவரை அறியாமலே புகழ்ந்து கூறப்பட்டுவிட்டன. தமிழ் மக்களின் முன்னேற்றத்தை விரும்பி உண்மையாகவே தந்நலங் கருதாது உழைப்பவர்கட்குத் "தமிழ்த் தாய்" இடம் அறிந்து உதவி புரிவது ஒரு வியப்பல்ல.

—**நகரதூதன்**

---

# நோபெல் பரிசு (The Nobel Prize)

## அறிவியல் வளர்ச்சிக்கும் உலக அமைதி ஏற்படுத்துவதற்கும் வழங்கப்படும் சுவீடன் நாட்டுப் பரிசு

**சுவீடன்**[1] நாட்டில் ஆண்டுதோறும் அளிக்கப் பெற்றுவரும் **நோபெல் பரிசு** பற்றிய வரலாறு உலகமுழுவதும் நன்கறிந்த தொன்றேயாம். அறிவியல் வல்லாரும், நூலாசிரியரிற் சிறந்தாரும், ஏனைய தகுதிவாய்ந்த பெரியாரும் அவரவர்கள் செய்த முயற்சியின் பெற்றிநோக்கி ஷை பரிசுபெற்று வருவதை நாம் அடிக்கடி செய்தித்

1. Sweden.

தாள்களில் கண்டு வருகின்றோம். தற்காலத்தில் எவருக்கும் கிடைக்கக்கூடிய பெரும்பேறுகளில் அஃது ஒன்று என்பதை எவரும் நன்குணர்வர். ஆயினும் அதன் பெருமையை அறிந்தார் சிலரே யாவர்.

இந்த நோபெல் பரிசை ஏற்படுத்திய பெரியார் சுவீடன் நாட்டில் 1833-ஆம் ஆண்டிற் பிறந்து 1896-ஆம் ஆண்டில் தமது 63-வது அகவையில் இம்மண்ணுலகைத் துறந்த [1]பொறிவலாளராகிய [2] ஆல்ப்ரெட் நோபேல் என்பார் ஆவர். இப்பெரியார் தாம் இறப்பதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னரே அதாவது 1895-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ஆம் நாள் நல்வினைப்பயனாக தாம் தேடியபொருளில் சிறுபான்மை நீக்கிப் பெரும்பான்மையான பொருளைக் கல்வி அறத்திற்கும் உலக நன்மைக்கும் பயன்பட வேண்டுமென்ற பெருநோக்குடன், ஷை பரிசு வழங்குதற்காக இறுதிக்காலமுறி (உயில்) ஒன்று எழுதி வைத்திருந்தார். அதில் உலக நலத்திற்காக, [3]இயற்கைப் பொருள்நூல், [4]இயைபு நூல், [5] மருத்துவம், [6] இலக்கியம், [7] உலக அமைதி வளர்ச்சி முதலியவற்றில் தேர்ச்சிமிக்க அறிஞர்க்குப் பரிசுகள் வழங்குவதற்கெனக் குறிப்பிட்டிருந்தது. இதற்காக அங்கே [8] நோபெல் கழகம் என ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுகள் வழங்குவதுமட்டுமன்றி ஏனைய முறைகளிலும் அப்பெரியாரது கருத்துக்களை நிறைவேற்றுவதே அதன் முதன்மையான குறிக்கோளாகும்.

1900-ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டு அரசியலார் அக்கழகத்தின் அடிப்படையான விதிகளை ஒப்புக்கொண்டனர். அதன் பின் ஆண்டில் முதன் முதலாகப் பரிசுகள் வழங்கப்பெற்றன. அப்பரிசுகள் ஐவகைப்படும். அவை இறுதிக்கால முறி(உயில்)யிற் கூறப்பட்டிருக்கும் நிறைவேற்றற் கழகத்தார் முடிபுக்கு உட்பட்டவையாகும். இயற்கைப் பொருள் நூல், இயைபுநூல் என்னும் இவ்விரண்டு துறைகளிலும் பரிசு பெறுவதற்குரியாரைத் தேர்ந்தெடுப்பதற்கு [9]ஸ்டாக்ஹாம் நகரத்திலுள்ள [10]அரசாங்க அறிவியற் கழகத்தையும், மருத்துவப் பரிசுத்தேர்வுக்கு சுவீடன் நாட்டிலுள்ள [11]அரசாங்க மருத்துவக் கல்லூரியாகிய [12]"கரோலின்ஸ்கா கழகத்"தையும், இலக்கியப் பரிசுத்தேர்வுக்கு சுவீடன் நாட்டு [13]அரசாங்க இலக்கியக் கழகத்தையும், உலக அமைதி வளர்ச்சிக்கு [14]நார்வே நாட்டுப் பாராளுமன்றாகிய [15]"ஸ்டார்ட்டின் ஜெற்"றால் அமைக்கப்பட்ட கூட்டுக்கழகத்தையும், துணைக்கொண்டே பரிசுகள் வழங்கும் உரிமையை சுவீடன் நாட்டு நோபெல் கழகத்தார் நிறைவேற்றுவார்கள். ஒவ்வொரு வகைப் பரிசுக்கும் அவ்வப் பரிசுக்குரியாரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட அவ்வக்கழகத்தாரே உரிமையுடையவராவர். மேற்குறித்த பரிசுகள் பெறுவதற்குரியவர்கள் இன்னார் இன்னார் என்பதனைத்

1. Civil Engineer. 2. Alfred Nobel. 3. Physics. 4. Chemistry. 5. Medicine. 6. Literature. 7. Peace Promotion. 8. Nobel Institute. 9. Stockholm. 10. Royal Academy of Science. 11. Government school for medical students. 12. "Karolinska Institute". 13. Royal Academy of Literature. 14. Norwegian Parliament. 15. "Stortinget."

தீர்மானிப்பதற்குரிய நன்முடிபுகள் இன்றியமையாதவை. அவ்வாறு முடிபுகள் கூறுவதற்குப் பரிசுவழங்கும் நிறைவேற்றற்கழக விதிகளின் படி சுவீடன் நாட்டிலும் ஏனைய நாட்டிலுமுள்ள அறிவியல் வல்லார் நற்சான்றுகளே பயன்படுவனவாகும். ஒவ்வொருவகைப் பரிசும் இருவருக்குப் பிரித்துக்கொடுக்கலாம். ஆனால் இருவருக்கு மேற்பட்டவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கக்கூடாது. மேலும் இருவரோ அதற்கு மேற்பட்ட எண்ணத்தினரோ சேர்ந்து ஒரு தொழிலை முடித்திருந்தால் அவர்களுக்குக் கொடுக்கலாம். பின்னும் ஓர் ஆராய்ச்சி நிலையத்திற்கோ, அல்லது ஒரு கழகத்திற்கோ பரிசுகள் வழங்கப்படலாம். சென்ற பல ஆண்டுகளிலும் பரிசுகள் ஒவ்வொன்றிற்கும் நூற்று முப்பதினுயிரம் (130,000) [1]குரோனர் முதல் நூற்றைம்பதினுயிரம் (150,000) குரோனர்வரை வழங்கப்பெற்றிருக்கின்றன. அத்தொகை தவிர பரிசுபெறும் ஒவ்வொருவருக்கும் [2]பெருந்தகுதிச் சீட்டும், பரிசு ஏற்படுத்திய பெரியாரின் உருவப்படமும் பரிசுகுறித்த நன்மொழிகளும் அமைந்த தங்கப்பதக்கமும் வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட பல்வேறு பரிசுகட்கும் தக்கவர்கள் அமையவில்லையெனக் கண்டால் அவ்வாண்டுப் பரிசுத்தொகையைப் பின் ஆண்டுக்கு ஒதுக்கிவைக்கப்படும். பின் ஆண்டிலு மவ்வாறே பரிசு பெறுதற்குரியவர் எவருமிலராயின் அத்தொகை முதலுடன் சேர்த்துக்கொள்ளப்படுமே; அல்லது அதனை வேறாக வைத்து அதிலிருந்து கிடைக்கும் வருவாய் மேற்குறித்த பல்வேறு வகைகளுக்கும் வழங்கப்பெறும். இத்தகைய புது நிதி இப்போது உலக அமைதிவளர்ச்சிப் பரிசுக்குமட்டுமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.


1901-ஆம் ஆண்டு முதல் 1934-ஆம் ஆண்டு வரை சென்ற 33 ஆண்டுகளில் பரிசுத்தொகைகளாக மொத்தம் இரண்டாயிரத்து எழுபத்து நான்கு கோடியே பன்னிரண்டு இலக்ஷத்து முப்பத்தாறுயிரத்து நானூற்று இருபது (20,741,236,420) குரோனர் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் திங்கள் 10-ம் நாள் இப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. அந்நாளே பரிசுக்கழகத்தின் ஆண்டு நிறைவு நாளாகும். பரிசு ஏற்படுத்திய பெரியாரின் பிரிவு நாளாகக் கொண்டாடும் நாளும் அந்நாளேயாகும். சுவீடன் நாட்டில் அப்பரிசு வழங்குதற்கென்று பரிசுக்கழகத்தாரால் நடத்தப்படும் விழாவன்றே பரிசுகள் வழங்குவது வழக்கம். அவ்விழாவின் போது சொற்பெருக்குகளும், இசையரங்குகளும் ஸ்டாக்ஹாம் நகரத்திலுள்ள [3]இசைக்கலைக் கழக மண்டபத்தில் நடைபெறும். அன்று சுவீடன் நாட்டுமன்னரே அப்பரிசுகளை வழங்குவது வழக்கம். நார்வே நாட்டில் அந்நாட்டுப் பாராளுமன்றாகிய "ஸ்டார்ட்டின் ஜெற்"றில் அப்பரிசுகளைப்பற்றிய தீர்மானம் அறிக்கை மூலம் வெளியிடப்படும்.

குறிப்பு:—Educational Review என்ற திங்கட் டாளில் வந்த கட்டுரையைத்தழுவி இஃது எழுதப்பட்டது.

S. சங்கரநாராயணபிள்ளை, திருநெல்வேலி.

---

1. Kronor (one kronor = one shilling $1\frac{1}{2}$ pence = $13\frac{1}{2}$ = annas).
2. Diploma. 3. Musical Academy Hall.



ஆசிரியர். கோ. வடிவேலு செட்டியாரவர்கள்.

# செய்திகளும் குறிப்புகளும் :
# News and Notes

## மதிப்புரை :

ஹோமியோ குடும்ப வைத்தியம் என்னும் நூல் நமது பார்வைக்கு வந்துள்ளது. ஹோமியோபதி என்னும் உயரிய மருத்துவ முறை மேனுட்டு செருமனிய மருத்துவ முறையாகும். இஃது அலோபதி என்னும் ஆங்கில மருத்துவ முறைக்கு மாறுனது. வள்ளுவர் கூறியாங்கு 'நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச்செய்த'லாகிய முறையே ஹோமியோபதியின் உயரிய முறை என்னலாம்.

இம்முறையின் சிறப்பாவன :—

(1) கூட்டு மருந்துகளின்மை.
(2) நஞ்சற்ற மருந்துடைமை.
(3) கொடுத்த மருந்தால் நோயற்றபாகம தாக்கப்படாமை.

இம் மருந்துமுறை பிரான்சு, செருமனி, ஆலந்து, இத்தாலி அமேரிக்கா, இந்தியா முதலிய நாகரிக நாடுகளிலெல்லாம் வேரூன்றித் தளைத்துப் பூத்துப் பலன் தருவதாகின்றது. இம்மருத்துவ மா நாடொன்றில் நம்மையாளும் மாட்சிமை தங்கிய 8-வது எட்வார்ட் சக்கரவர்த்தியவர்கள் தலைமை தாங்கி சிறப்புரை வழங்கியிருப்பதும், இந்திய நாட்டுப் பரோடா கெய்க்குவார் மன்னர் மருந்து முறையைக் கைக்கொண்டு பாராட்டியிருப்பதும் யாவருங் கொண்டாடத்தக்க தென்பதை எளிதில் விளக்கும்.

நந் தமிழ்நாட்டில் குடும்பப் பெண்களும் எளிதில் இந்நூலைக் கற்றறிந்து சிகிச்சை செய்துகொள்ள வேணுமென்ற பெருநோக்குடன் முதன் முதல் எளிய தமிழ் நடையில் எழுதி 36 அத்தியாயங்களில் வெளியிட்டிருக்கும் இந்நூலாசிரியர், டாக்டர் A. Diraviam L. M. S., அவர்கள் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

நோயற்ற வாழ்க்கை நடாத்த விரும்பும் மக்கள் யாவரும் இதனை வாங்கிப் போற்றத்தக்க முறையில் இந்நூற்குக் குறைந்த விலை அணு 10 ஆக ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.

வேண்டுவோர் பாளையங்கோட்டை, தமிழகம், பிராவிடெண்டு இன்சுரன்சு பாங்க் லிமிட்டெட், மானேஜர், என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

---

## பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி முதலியன

இந்நூல் தமிழறிஞர் ம. ஆ. நாகமணி அவர்களால் வெளியிடப் பட்டது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆராய்ச்சி செய்வார்க்கு இந்நூல் பெரிதும் துணையாயிருக்கும். இத்தகைய நூலைத் தொகுத்த ஆசிரியரது உழைப்பும், துன்பமும் தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டுதற்குரியன.

இதன்கண் பொருளதிகார உரையிலுள்ள மேற்கோள் விளக்கம் பொருட்குறிப்பு முதலியனவும், பேராசிரியர் நச்சினார்க்கினியர் வரலாறுகளும் அடங்கியன. இம்மாதிரி ஏனைய அதிகாரங்கட்கும், ஏனைய உரைகட்கும் குறிப்புக்கள் வெளிவரின் தமிழ் ஆராய்ச்சியாளர்க்குப் பெரும்பயனுயிருக்கும். (316 பக்கம்)

இதன் விலை ரூ. **1—4—0**

[இந்நூல் ஆசிரியரிடத்திலும், கழகத்திலும் கிடைக்கப்பெறும்.]

---

## ஆயுர்வேத ஔஷத முறைகள்

இந்நூல் டாக்டர் A. R. S. சுந்தரம் அவர்களால் இயற்றிப்பட்டது. இதன்கண் குறிக்கப்பெற்ற மருந்து முறைகள் யாவும் தமிழ் மருத்துவ ஆசிரியர்கட்கும், பொதுமக்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. வடமொழிக் கருத்துக்கள் யாவர்க்கும் எளிதில் விளங்கும் வகையில் மொழி பெயர்க்கப்பெற்றிருக்கின்றன.

இது புதிய எழுத்துக்களில் நல்ல காகிதத்தில் திருத்தமான முறையில் அச்சிடப்பெற்றிருக்கின்றது. அழுத்தமான கலிக்காக் கட்டடம் செய்யப்பட்டுளது. பிரதி 1-க்கு விலை ரூ. **2**.

---

## அமிர்தபிந்து உபநிஷத்

இதுவும் டாக்டர் திரு. A. R. S. சுந்தரமவர்களால் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டது. விலை அணா **2**.

**குறிப்பு :** இந்நூல்கள் ஆசிரியரிடத்திலும், கழக நிலையங்களிலும் விலைக்குக் கிடைக்கப்பெறும்.

---

## தமிழ்மொழி நூல்

இது வித்தியாரத்னம் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களால் இயறறப்பெற்று, திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்துத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் பொருளுதவியைக்கொண்டு வெளிவந்துளது. இதன்கண் வெளிவந்துள்ள கருத்துக்கள் ஆராய்ச்சிக்குரியன. இதன் விலை ரூ. ஒன்று.

## தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி

### தனித்தமிழ்த் தேர்வுகளின் முடிபு

இற்றைக்கு ஈராறாண்டுகளின் முன் இவண் ஏற்பட்டு, ஆண்டு தோறும் தனித்தமிழ்த் தேர்வுகள் நடத்தித் தேர்ந்தவர்க்குப் பரிசுந் தேர்ச்சி இதழும் உதவிப் பெருமைசெய்துவரும் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்வுகள் 1936-ம் வருடம் ஜூன்மீ 24, 25, 26-க்குச் சரியான மெய்கண்டான்யாண்டு ௭௱௰௩, ஆனித் திங்கள் ௰௧, ௰௨, ௰௩, புதன் வியாழன் வெள்ளி இந்நாட்களில், **ஆரணி, யாழ்ப்பாணம், திருநெல்வேலி** ஆகிய மூன்று தலைநகர்களிலும் தக்கார் மேற்பார்வையில் நடைபெற்றன. இவற்றில் தமிழ்த்தேர்வுக்கு விண்ணப்பித்தவர் நால்வர். எழுதியவர் மூவர், தேர்ந்தவர் ஒருவர். இளந்தமிழ்ப் புலவர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் மூவர், எழுதியவர் இருவர், தேர்ந்தவர் ஒருவர். இத்தேர்வுகட்குரிய பாடமுறைகளை நன்கு பயின்று தேர்வுகட்குப் பலராக விண்ணப்பித்துத் தேர்ச்சி பெறின், கலாசாலைகளிற் றமிழாசிரியராக அமர்தற்குத் தகுதி பெற்றவராவர். ஆங்காங்குள்ள தமிழன்பர்கள் தமிழறிஞர்களைப் பெருக்குவதற்கு வேண்டுவன புரிய முன்வருவார்களாக.

### தமிழ்த்தேர்வு 3-வது வகுப்பு

பதிவெண்-139 K. நடேசன், M. குப்புசாமி முதலியார் புதல்வர், ஆசிரியர், தேவாங்க வீதி, ஆற்காடு.

### இளந்தமிழ்ப்புலவர் 3-வது வகுப்பு

பதிவெண்-140 க. ஞானசேகரம், மு. கணபதிப்பிள்ளை மகன், சண்டிருப்பாய் வடக்கு, மாணிப்பாய், யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி }
12-11-36 }    பு. சி. புன்னைவனநாதன், அமைச்சர்.

---

## தமிழ்ப்பெரியார் இருவர் பிரிவு

### காலஞ்சென்ற திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள்

இவர்களை அறியாதவர் நம் நாட்டில் இரார் என்றே நினைக்கிறோம். இவர்கள் புகழ்பட வாழ்ந்து தமது அறுபத்தைந்தாம் அகவையில் 18-11-36 புதன்கிழமை யன்று இறைவனடி சேர்ந்தமை தமிழ்நாட்டிற்குப் பெருந்துயரை விளைத்துளது. இவர்கள் மக்களிடத்து அளவிலா அன்பும் இரக்கமும் உடையவர்கள். கொண்ட கொள்கையில் மிகவும் உறுதியாய் நிற்பவர்கள். இவர்கள் தேர்ந்த

வழக்கறிஞராய் விளங்கினார்கள். கேட்டார்ப்பிணிக்கும் வகையில் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்கள். இவர்கள் பேச்சுக்களில் நகைச்சுவை நிரம்பித் துளும்பும். இவர்கள் தமது பிற்கால வாழ்க்கையில் தமிழ்ப் பணி யாற்றிவந்தார்கள். திருக்குறள் மணக்குடவருரையை முதன் முறை வெளியிட்டவர்கள் இவர்களே. தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணருரையைத் திருத்தமாக வெளியிட்டிருப்பதோடு பொருளதிகாரத்தையும் இளம்பூரண ருரையுடன் வெளியிட்டுள்ளார்கள் **அகமேபுறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம், மனம் போல வாழ்வு** ஆகிய நான்கு நூல்களை ஆங்கிலத்தினின்றும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். **மெய்யறம், மெய்யறிவு** முதலிய நூல்களைத் தாமே இயற்றி வெளியிட்டுள்ளார்கள். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் இன்னிலையை உரையுடன் முதன்முதல் வெளியிட்டவர்கள் இவர்களே திருக்குறளுக்குத் தாமே புத்துரை ஒன்று எழுதியிருப்பதில் **அறப்பால் உரைமட்டும்** வெளி வந்துளது.

இவர்கட்குத் தமிழ்மக்கள் செய்யுங் கைமாறு யாதெனின், இவர்கள் பதித்த நூல்களை வாங்கிப் போற்றுதலேயாகும். முனிசிபல் தலைவர்களும், ஜில்லாப்போர்டு தலைவர்களும் தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்கட்குப் பிள்ளையவர்கள் நூல்களைத் தொகுதியாக வாங்கிக் கொடுத்துதவுவார்களாக!

இவர்கள் பதிப்பு நூல்களெல்லாம் எமது கழக நிலையங்களில் கிடைக்கப்பெறும்.

---

## வித்துவான் கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

காலஞ்சென்ற வித்துவான் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் வேதாந்தப் பேராசிரியராவர். தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் மிகவும் ஆராய்ச்சி யுடையவர்கள். கைமாறு கருதாமல் தம்மை யடைந்தவர்கட்குப் பாடஞ்சொல்லி வந்தவர்கள். யாவரும் கேட்டு மகிழ்வடையும்படி இனிமையாய்ப் பேசுவார்கள். அவர்கள் எழுதிய **திருக்குறள் விருத்தியுரை** தமிழுலகம் மிகவும் மதிக்கற்பாலதாய் விளங்குகின்றது. சென்னை இந்து தியாலஜிகல் கலாசாலைத் தமிழாசிரியராக இருந்து விடுதியில் பெற்றுத் தமது எழுபத்து மூன்றாம் அகவையில் 24-11-36 செவ்வாய்க்கிழமையன்று எல்லாம்வல்ல இறைவனடி சேர்ந்தார்கள். பழுத்த வயதில் பிரிந்தார்களாயினும் இவர்கள் பிரிவு தமிழுலகம் வருந்துதற்குரியதே.

---

அழகிற் சிறந்தது : பயன் மிக்கது : விலை குறைந்தது :

**1937 திருக்குறள் டைரி**

**வெளிவந்து விட்டது**

சாதா விலை அணா **5**. பென்சில் ரப்பர் நாடாவுடன் அணா **6**.

# புதிய கழக வெளியீடுகள்

## கம்பராமாயணசாரம் பாலகாண்டம்

பொழிப்புரை, குறிப்புரை, ஆராய்ச்சியுரை, கதைத் தொடர்ச்சியுடன். ஆசிரியர் : ராவ் சாஹிப் வெ. ப சுப்பிரமணிய முதலியாரவர்கள். இதற்கு டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமிழ் முகவுரையும், சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஆங்கில முகவுரையும் எழுதியிருக்கின்றார்கள். டெம்மி 298 பக்கங்கள்.

இதன் ராப்பர் விலை ரூ. **1-10-0**. கலிக்கா விலை ரூ. **2-0-0**

முனைப்பாடியார் இயற்றிய

## அறநெறிச்சாரம்

பதவுரை, விளக்கவுரைகளுடன் இதற்கு இதுகாறும் உரை வெளிவந்ததில்லை இஃது ஒரு சிறந்த நீதிநூலாகும்.

இதன் விலை அணா. **12.**

## நீதிநூற்கொத்து மூலமும் உரையும்

இரண்டாம் பாகம்

இதன்கண் நீதிவெண்பா, அறநெறிச்சாரம் நீதிநெறி விளக்கம் ஆகிய மூன்றும் உரையுடன் அடங்கியன. கலிக்சாக்கட்டடம். விலை ரூ. **1-12-0**.

## வெண்பாப் பாட்டியல் அல்லது வச்சணந்தி மாலை

விருத்தியுரையுடன் விலை அணா **6**

## நூற்றொகை விளக்கம்

மனோன்மணீய ஆசிரியர் P சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியது. (அச்சில்)

## ஹிட்லர் வரலாறு

வெ. சாமிநாத சர்மா எழுதியது.

படங்களுடன் 422 பக்கங்கள் விலை ரூ. **2-4-0**

ஜவஹர்லால் நேரு சுயசரித்திரம் விலை ரூ. **2-8-0**

## திரு J. S. பொன்னையா M. A. எழுதியவை

| | | |
|---|---|---|
| கிராமச் சீரமைப்பு (Rural Reconstruction) | 1 | 4 |
| நாணய மாற்று (Foreign Exchange) | 1 | 8 |
| நாணயம் (Essays on Money) | 1 | 2 |
| இந்தியாவின் கிராமப் பொருள் நிலை (Rural Economy) | 1 | 0 |
| பொருளாதார நூல் (A first book of Economics) | 0 | 12 |
| அகநூல் (Pyschology) | 1 | 8 |
| தமிழைப் பிழையின்றி எழுதும் முறை (தமிழாசிரியர் ஆ. வீ. கன்னையநாயுடு எழுதியது) | 0 | 8 |

Reg. No. M. 1725 1936 Nov.—Dec.

## 'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

## (Editorial Board Members)

தலைவர் :

1. திருவாளர் M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

---

2. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
தலைவர், மணிவாசக மன்றம், திருநெல்வேலி.

3. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

4. ,, துடிசைகிழார் A. சிதம்பரனாரவர்கள்
ரிட்டையர்ட் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கோவை.

5 ,, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B.A.,
வழக்கறிஞர், சாத்தூர்.

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

8. ,, வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், செயிண்ட் சேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
தமிழாசிரியர், லாலுகுடி.

10. ,, காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், B.A.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

---

Printed by Mr. C. M. Govindarajan, at the The Progressive Printers.
Coral Merchant Street, Madras. and Published by Mr. V. Subbiah
for The S. I. S. S. W. P. Society, Tinnevelly, Ltd.